279

பலோட்டிய தமிழன்

279

சிவஞான கிராமணி

கப்பலோட்டிய தமிழர்
வ. உ. சிதம்பரம் பிள்ளை
அவர்களின் வாழ்க்கை
வரலாறு சுருக்கமாகப்
பல பத்திரிகைகளில்
வெளி வந்திருக்கிறது.
புத்தக வடிவில் விரிவாக
ஸ்ரீ கிராமணி அவர்கள்
எழுதி உதவியிருக்
கிறார்கள்.

27

கப்பலோட்டிய தமிழன்

PRESENTED BY THE REGISTRAR OF BOOKS
14 FEB 1944
MADRAS

923.254

வ. உ. சிதம்பரம் பிள்ளை
வாழ்க்கை வரலாறு

2634
1-44

சிவஞான கிராமணி

1944 ஜனவரியில்
வெளியிடப்பட்டது

V441:52 N7

பதிப்புரிமை பெற்றது

விலை அணா 8

வீரர் சிதம்பரம் பிள்ளை

மடமையதோ பிறநாட்டார் மயக்கந்தானோ
மக்களெல்லாம் சுதந்திரத்தை மறந்தாராகி
அடிமை இருள் நள்ளிரவாய் அனைத்தும்மூடி
யாரும்தலை நீட்டவொண்ணு அந்தநாளில்
திடமனத்துச் சிதம்பரப்பேர் பிள்ளைவாள்தான்
செய்திருக்கும் அச்சமற்ற சேவை சொன்னல்
உடல் சிலிர்க்கும் உயிர்நிமிர்ந்து உணர்ச்சிபொங்கும்
உள்ள மெல்லாம் நெக்குநெக்காய் உருகுமன்றே.

எல்லாரும் தேசபக்தர் இந்தநாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க்காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணுத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்தநாளில்
வல்லாளன் சிதம்பரனர் சிறையிற்பட்ட
வருத்தமெல்லாம் விரித்துரைத்தால் வாய்விட்டோங்கி
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்ட
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்.

சாதிகுலச் சமயமெல்லாம் கடந்ததக்கோர்
சமரசமும் சன்மார்க்கம் தழுவும் சான்றோர்
நீதிநெறி மிகப்பயின்ற பலபேர் சேர்ந்து
நிருவியநம் காங்கிரசை நிதமும் போற்றி
பேதமுற்றுப் பிணங்கிவிட நேர்ந்தபோதும்
பெரியசபை அதைஇகழ்ந்து பேசா நேசன்
ஓதி அதன் வளர்ச்சியையே விரும்பி வாழ்த்தி
உள்ளளவும் சிதம்பரந்தான் உவப்பான் உள்ளம்.

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலாம் என்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணப் பெருமையினுல் தலைவராகி
காங்கிரசை நடத்தியதைக் கண்டு நொந்து
தேசநலம் த்யாகமின்றி வருமோ என்று
திலகர்பிரான் செய்தபெரும் கிளர்ச்சி சேர்ந்து
ஓசைபடா துழைத்த சில பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனுர் ஒருவராகும்.

உழுதுபல தொழில் செய்து உழைப்போரெல்லாம்
உணவும் உடை வீடின்றி உருகிவாட
பழுது மிக அன்னியர்க்குத் தரகராகிப்
பசப்புகின்ற வீணருக்கோ சுகங்கள்! என்று
அழுதுருகித் தொழிலாளர் இயக்கம் கண்டு
அந்நாளில் சிதம்பரனுர் நட்டவித்தாம்
விழுதுபல விட்டுபெரும் மரமாய் இன்று
வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக் காண்போம்.

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுகேட்கும்
கருப்பெனினும் சிரிப்புமுகம் கருணைகாட்டும்
குள்ளமென்னும் ஒரு உருவம் இருகை கூப்பி
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்கநிற்கும்
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியேவீசும்
கொள்ளைகொள்ளை சிறையிருந்த குறிகள்தோன்றும்
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்.

—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

1. இளமையும் இல்வாழ்க்கையும்

திருநெல்வேலி தமிழ் நாட்டின் ஒரு பகுதியான தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தது. இஃதொருகால் ஓர் இடையன் பாற்குடத்தைத் தலைமீது வைத்துக்கொண்டு மூங்கிற் காட்டினூடே செல்கையில், பாற்குடம் மூங்கிலால் இடறப்பட்டு விழுந்தது. இவ்வாறே பன்னாள் இடறிவிழ அதற்குக் காரணமான மூங்கிற் புதரை வெட்டினன் இடையன். அக்கால் முழு முதற் காரணனான முதல்வன் மூங்கிலின் மூலத்திலிருந்து வெளிப்பட்டனன். அன்று முதல் அவ்விடத்திற்கு 'வேணுவனம்' என்றும், அம்முதல்வனுக்கு 'வேய்முத்தர்' என்றும் பெயர் வழங்கலாயின என்பர். சிறிது காலத்திற்குப் பிறகு, ஓர் அந்தணன் வேய்முத்தர் திருப்பணிக்காக நெல்லை உலரவிட்டுத் தான் வேற்றிடஞ் சென்றிருக்கையில், மழைபெய்ய அந்தணர் நெற்கள் நனைந்துவிடுமே என்ற பயத்தால் "எம்பெருமானே! திருப்பணிக்கு முட்டுவராது காத்தருள்" என்று பிரார்த்தித்துக் கடுகிவந்து பார்க்கையில் நெல் நனையாமல் வேலியிட்டதுபோலச் சுற்றிலும் மழைநீர் விலகி ஓடியிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் பலவாறு துதித்தனரென்றும், அந்நாள்முதல் வேணுவனத்திற்குத் "திருநெல்வேலி" என்று பெயர் வழங்கிற்றென்றும் பெரியோர் கூறுவர். இவ்வாறு சிறப்பு வாய்ந்த திருநெல்வேலி ஜில்லாவிலே, தூத்துக்குடிக் கருகில், ஓட்டப்பிடாரம் என்னும் ஒரு சிற்றூர் உண்டு; இதற்குத் தென்னளகை என்றும்

பெயர். இவ்வூரில் சைவவேளாளர் குலத்தில் திரு. வள்ளியப்பப் பிள்ளையென்பவர் இருந்தார். இவருக்கு திரு. உலகநாதப் பிள்ளை என்பவர் உதித்தார். இவர் வழக்கறிஞராக இருந்து பொருளீட்டித் திருக்கோயில் திருப்பணி முதலிய நற்காரியங்களில் செலவிட்டு வருவிருந்து ஓம்பி வள்ளலாய் விளங்கினர். இச்செல்வச் சீமானுக்கும், பரமாயிஅம்மையாருக்கும் திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை 1872-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் தேதி வியாழக்கிழமை நந்தமிழ்நாடு செய்த நற்றவத்தால் நானிலத்தில் குமாரராய்த் தோன்றினர்.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் முதன் முதலாகக் கல்வி பயின்றது ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமே. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதுபோல, இளமையிலேயே பிள்ளையவர்கள் உள்ளத்தில் இன்றமிழ் வித்து ஆழ்ந்து பதிந்துவரலாயிற்று. இவர் தூத்துக்குடி செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியில் ஆங்கிலம் பயின்றார். இவர் நுண்ணறிவுடையா ராதலால் ஒவ்வோராண்டும் வகுப்புத் தேர்வில் தவறுமல் தேர்ச்சிபெற்று மெட்ரிகுலேஷன் பரீக்ஷையிலும் வெற்றி யடைந்தார். பின்னர் வழக்கறிஞர் பரீக்ஷையிலும் தேர்ச்சிபெற்றார். இவர் நாட்டுக் கல்வியில் நாட்டமுடையவரா யிருந்தமையால் இவருக்குத் தமிழறிவு சிறந்து விளங்குவதாயிற்று.

சிதம்பரம் பிள்ளை வழக்கறிஞர் தொழிலை முதலில் ஒட்டப்பிடாரத்திலேயே தொடங்கினர். பின்னர் நண்பர்களின் வேண்டுகோளின்படி 1900-ம் ஆண்டில் தூத்துக்குடிக்குச் சென்று தொழில் நடத்தினர். இவர் வயதில் இளைஞராயிருந்தும் பிற வழக்கறிஞர்கள் இவரைக்கண்டு

பொறுமை கொள்ளும் வண்ணம் தொழிலைத் திறம்பட நடத்திவந்தார். பிள்ளைக்குக் கிரிமினல் தரப்பில்தான் பழக்கமும் அனுபவமும் உண்டு. இதில் இவருக்கு மிக்க அந்தஸ்தும், அனுபவமும் வாய்ந்த பிற வக்கீல்களைவிட அதிக வருமானம் வந்துகொண்டிருந்தது. இவர் வக்கீல் தொழிலில் வரும் வருமானமொன்றையே நாடாமல், ஒழுக்கம், வாய்மை இவற்றையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இந்தச் சீரியநோக்கு வாழ்நாள் முழுவதும் இவரிடம் காணப்பட்டது. பிள்ளைக்கு ஏழைகளிடத்தில் இரக்கம் அதிகம். இவர் கக்ஷிக்காரன் சக்திக்குத் தகுந்தவாறு பணங் கேட்பாரே யன்றி வழக்கின் தன்மையைக் கவனிக்கமாட்டார். ஏழைகளுக்கு இனமாகக்கூட வழக் கெடுத்துரைப்பதுண்டு. போலீசார் யார்மீதாவது தவறாக வழக்குத் தொடுத்ததாக இவர் மனத்துக்குத் தோன்றினால் அந்த நிரபராதிக்குத் தம்மால் இயன்ற உதவியைப் பிரதிப் பிரயோசனம் எதையும் எதிர்பாராது தாமே முன்வந்து செய்வார். இதனால் போலீஸ் அதிகாரிகளின் ஆத்திரத்துக்கு ஆளாகவேண்டி யிருப்பினும் பிள்ளை அஞ்சமாட்டார். இவர் தற்கால வக்கீல்கள் போலல்லாமல் கடுஞ் சொல்லின்றிக் காட்சிக் கெளியவராக விருப்பார்.

சிதம்பரம் பிள்ளையின் தந்தையார் அவருக்கு 23-வது வயதில், திருச்செந்தூர் சுப்பிரமணியப் பிள்ளையின் குமாரத்தி வள்ளியம்மை யென்ற மங்கைநல்லாளை 1894-ம் ஆண்டில் மணஞ் செய்து வைத்தார். இம்மங்கையார் தம் இல்வாழ்க்கையில் உற்றுழியுதவும் ஊன்றுகோல்போலவும், அறுசுவையுண்டியில் அன்னைபோலவும் விளங்கினர். பிள்ளையவர்களிடம் ஒருநாள் உறவினனொருவன் ஒரு கக்ஷிக்காரனைக் கொண்டுவந்து விட்டு அவன் சென்றபிறகு 'கமிஷன்'

கேட்க, பிள்ளை இவ்விஷயத்தைப் பற்றித் தம் மனைக் கொடியாகிய வள்ளியம்மையாரிடம் கலந்து ஆலோசித்தார். இவ்வம்மையார், "கமிஷன் கொடுத்துக் கொள்ளும் வழக்கைக் கொள்ளற்க. தாங்கள் பெற்ற பொருளைத் திருப்பிக் கக்ஷிபால் கொடுக்க" என்று மதிமந்திரிபோல் மொழிந்தனர்.

பின்னொருகால் பிள்ளையவர்கள் கண்ணில்லாத ஒரு ஞானியைத் தனதில்லத்தில் வைத்துக் காப்பாற்றி வந்தார். வள்ளியம்மை அவ்வந்தகருக்குத் தாமே அமுதூட்டுவார். இதையறிந்த அயலார் இழிகுலத்தோனுக்கு வீட்டில் அமுதளித்து வருகின்றாரென அவதூறு சொல்கையில் அதுபொருது பிள்ளையவர்கள் இவ்வம்மையாரிடம் அவ்விழிமொழியை இயம்பினர். அம்மையார், "எல்லாம் உணர்ந்த நாத! சந்நியாசிக்குக் குலம் ஏது? எவ்வுயிரும் ஒன்றல்லவா! உயிர்கள்தோறும் பரமன் வீற்றிருக்கின்றான் மக்கட் படைப்பில் உயர்வு தாழ்வு கிடையாதென்பது தாங்கள் அறிவித்ததுதானே! மற்றவர் மதிக்க நாம் எவ்வறத்தையும் செய்தல் கூடாது. மனத்துக்கண் மாசிலாது செய்வதே அறம்" எனக்கூறி மெய்ஞ்ஞான குருபோல் விளங்கினர். இதன்றியும், கல்விநலனும் பெற்றிருந்தார் என்பதற்கு அம்மையார் திருக்குறளைப் பொருளுடன் ஓதியுணர்ந்தமையே சான்றாகும். இவ்வித குணநலன்கள் பெற்றிருந்த வள்ளியம்மையார் 1901-ம் வருடம் அகால மரணமெய்தினர். நன்றியறிதலையே நல்லொழுக்கமாகக் கொண்ட பிள்ளையவர்கள், முதல் மனைவியின் ஞாபகார்த்தமாக மீண்டும் அவ்வம்மையாரின் குடும்பத்திலேயே திருமதி மீனாக்ஷியம்மை என்ற பெண்ணரசியை மணம்புரிந்து கொண்டார். இவ்வம்மையார் இப்பொழுதும் வாழ்ந்து வருகின்றார்.

2. சமயக் கொள்கை

சிதம்பரம் பிள்ளை சைவ சமயத்தைச் சேர்ந்தவர். இவர் தம் இறுதிக் காலத்தில்,

"மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்னுங் குறளுக்கு,

"மலைமிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்னும் பாடபேதங் காட்டியதே இவர் சைவ சமயக் கொள்கையில் பற்றுடையவர் என்பதை விளக்கும். பிள்ளை சமயப்பற்றும், கடவுள் பக்தியும் மிகுதியும் கொண்டிருந்தா ரெனினும், அர்த்தமற்ற சமயச் சடங்குகளை இவர் ஆதரிப்பதில்லை. கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கம் இவரிடம் கிடையாது. சமயப் பழக்க வழக்கங்களையும், முந்தையோர் கூறியுள்ள மொழிகளையும் கால தேச வர்த்தமானத்திற் கேற்றபடி மாற்றி யமைத்து அதன்படி ஒழுக வேண்டு மென்பது இவரது கருத்து. பிள்ளை வேதாந்த மார்க்கத்தில் விருப்பங்கொண்டிருந்தார். தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ள வேதாந்த நூல்களை வாசித்திருந்தார். காஷாயமணிந்த சந்நியாசிகளை உபசரிப்பதில் பிள்ளைக்குப் பிரியமதிகம். சுவாமி வள்ளிநாயகம் என்ற சந்நியாசியைப் பலகாலம் தன தில்லத்தில் வைத்து உபசரித்தார். சுப்பிரமணிய சிவாவை நேசித்ததற்கும், அவருக்கு உணவும், இடமு மளித்து ஆதரித்ததற்கும் சிவா, சந்நியாசி

யென்ற காரணமேயாகும். சந்நியாசிகள் கூட்டுறவாலும், வேதாந்த விசாரணையாலும்பிள்ளைக்குச்சந்நியாசியாகவேண் மென்ற ஆவல் அதிகரித்தது. இவரது முதல் மனைவி வள்ளி யம்மையார் விண்ணுலகெய்தியகாலையில், அவ்வம்மையா ரின் பிரிவாற்றுமையால் மனங் கலங்கி அத்துடன் இல்ல றப்பற்றை யொழித்துத் துறவறம் பெறுவதென்று பிள்ளை முடிவுசெய்தார். பின்னர் உறவினர், நண்பர்களின் வற் புறுத்தல் காரணமாகத் தனது கருத்தை மாற்றிக்கொண் டார். 1900-ம் ஆண்டில், சுவாமி வள்ளிநாயகத்தின் துணை கொண்டு 'விவேகபானு' என்ற தமிழ் மாதப் பத்திரிகை யொன்றைஆரம்பித்துப் பலவாண்டுகள்வரை நடத்திவந்தார். அப்பத்திரிகையின் மூலம், வேதாந்தம், ஆசாரச் சீர்திருத் தம், மதுவிலக்கு முதலிய சிறந்த கொள்கைகளைத் தமிழ ரிடையே பரப்பினர்.

வாய்மூடி மௌனியாகி வாழ்வதில் இவருக்கு ஆசை யதிகம். 1933-ம் ஆண்டில் வாராந்திர மௌன விரதத்தைக் கைக்கொண்டு, பல வாரங்கள்வரை விடாமல் அனுஷ்டித்து வந்தார். பிரதி திங்கட்கிழமைகளிலும் எல்லா அலுவல்களை யும் நிறுத்தி எவருடனும் பேசாது தனியிடத்தமர்ந்து ஆத்ம விசாரணையில் ஈடுபட்டார். மௌன காலத்தில் தனக்கேற் பட்ட அனுபவத்தைப்பற்றி அக்காலத்தில், "தமிழ்நாடு" தினசரிப் பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். மௌனத்தால் மனம் தன்வயப்பட ஏதுவாகிறதென்றும், ஆத்மசக்தி யதிகரிக்கிற தென்றும் அக்கட்டுரைகளில் தெரி வித்திருக்கிறுர்.

மனிதனுக்கு மனிதன் உயர்வு, தாழ்வு கற்பிப்பதை அவர் அடியோடு வெறுத்தார். ஜாதிக்கொரு நீதிகூறும் சழக்கர்

களையும், பிறப்புக் காரணமாக ஒருவனைத் தீண்டாதவனெனக் கூறும் தீயர்களையுங் கண்டிக்கப் பிள்ளை சற்றுந் தயங்கினாரில்லை. கடவுள் படைப்பிலே அனைவரும் சமம் என்ற உயரிய கருத்தே இவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. ஹரிஜன அன்பரொருவரைப் பிள்ளை, தனது இன்னுயிர்த் துணைவராகக் கொண்டு தமிழ்க் கல்வியைக் கற்பித்தார். அவர் யார் தெரியுமா? அவர்தான் சிதம்பரம் நந்தனார் மடாலயத் தலைவரும், சென்னை அசெம்பிளி அங்கத்தினருமான **சுவாமி சகஜானந்தம்**. பிள்ளை சிறையிலிருந்து மீண்டதும் சிலகாலம் சென்னையில் வசிக்கநேர்ந்தது. அப்போது ஒருநாள் சென்னை ரிப்பன் அச்சு யந்திரசாலையில் பிள்ளையவர்களும், சுவாமி சகஜானந்தரும் முதன் முதலாக ஒருவரை யொருவர் சந்தித்து உரையாட நேர்ந்தகாலையில், பிள்ளை அவரது ஜாதியை விசாரித்தார். "நான் நந்தனார் வகுப்புப் பிள்ளை" யென சகஜானந்தர் பதிலளிக்க, உடனே பிள்ளை சகஜானந்தரின் இரு கைகளையும் இறுகப் பிடித்து, "உண்மையைக் கூறியதால் நீர்தான் உண்மை யந்தணர்" எனக்கூறி, சகஜானந்தரைத் தன தில்லத்திற்கு வரச்செய்தார். பின்னர் பல ஆண்டுகள் அவரைத் தன் வீட்டிலேயே வைத்திருந்து, உணவளித்துத் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய சிறந்த தமிழ் நூற்களைப் பயிற்றுவித்தார். பிள்ளை சென்னையை விட்டு நீங்கி, மீண்டும் தனது சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரத்திற்குச் சென்றபோது சகஜானந்தரையும் தன்னுடன் கூட்டிச்சென்றார். பிள்ளை தனது உறவினர் இல்லங்களில் நடக்கும் விசேஷங்களுக்குச் சகஜானந்தரையும் தம்முடன் அழைத்துச் செல்வார். யாராவது சகஜானந்தரைப் பற்றி விசாரித்தால் "இவரொரு சந்நியாசி, இவரை ஜாதி விசாரிக்கப்படாது" என்பாராம். "தனது பிள்ளையைப் போன்று என்னை வளர்த்தார். அப்பெருந்தகை வள்ளல்"

எனச் சகஜானந்தரே கூறுகின்முரெனில் வேறென்ன அத்தாட்சி வேண்டும். சகஜானந்தர் பிள்ளையவர்களுக்கு எழுதிய நிருபமொன்றில்,

"கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டி னென்றனக்கு
மெய்ம்மாட்டி நின்றருளும் வித்தகனே—செம்மறையின்
பாவனைத்தும் சிந்தை பதிவித்தேன் சிதம்பரமென்
தேவநின தின்னருளாற் றேர்ந்து."

"சாவா மருந்தெனவே தற்பரனுர் வள்ளுவர்செய்
பாவா லறிவெனக்குப் பாலித்த—தேவா
சிதம்பரமென் சற்குருவே சிந்தையினில் நின்னின்
பதம்பெற்றே னென்றும் பணிந்து"

எனத் தன் குருநாதனைத் துதிசெய்கின்முர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 FEB 1944
MADRAS

"சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி"

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியாவில் பலமான அஸ்திவாரம் கொண்டதாயிருப்பினும், இடையிடையே சிறிது ஆட்டங் காண்பதுமுண்டு. அப்படி நேரும்போதெல்லாம் அது தன்னைப் பலப்படுத்திக்கொள்ள முயற்சிசெய்வது வழக்கம். அம் முயற்சிகளுள் ஒன்று வங்காளப் பிரிவினை. வங்காள மாகாண வாசிகளின் தேசபக்தியையும், ஒற்றுமையையும் குலைக்க எண்ணி, வைசிராய் லார்டு கர்ஸான் அம் மாகாணத்தை இரண்டாகப் பிரித்தார். அவரது பிரிவினைத் திட்டம், வங்காளத்தை ஹிந்து வங்காளம், முஸ்லிம் வங்காளம் எனக் கூறுபோட்டு, நிரந்தரமான வகுப்புப் பிணக்குகளுக்கு அஸ்திவாரம் போடுவதுபோ லிருந்தது. இதனால் வங்க மாகாண வாசிகள் சீற்றங் கொண்டனர். தேசம் முழுவதும் வங்கப் பிரிவினையை எதிர்த்தது. பிரிட்டிஷ் சர்க்கார் பிரிவினையை ரத்துசெய்யாததைக் கண்டிக்கவேண்டி, பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிக்கவேண்டுமெனத் தேசத் தலைவர்கள் தீர்மானித்தனர். இதனால் மக்களிடையே நாட்டுப்பற்றும் பிறநாட்டுப் பொருள்களை விலக்கவேண்டுமென்ற எண்ணமும் பெருகின. இப் புத்துணர்ச்சி பிள்ளையவர்களின் உள்ளத்தையும் கொள்ளைகொண்டது. இவரது நாட்டுப் பற்றாகிய தீ எழுநாவிட்டு எரியத் தொடங்கியது. தம்மிடமிருந்த அன்னிய ஆடைகளனைத்தையும் அக்கினி தேவனுக்கு அர்ப்பணம் செய்யுமாறு கல்கத்தாவுக்கு அனுப்பிவைத்தார். இனி அன்னிய ஆடை, பொருள் ஆகிய எவையும் வாங்குவதில்லை யெனவும் சபதம் பூண்டார். அன்னியக் கத்திவைத்துள்ள நாவிதனிடம் இவர் க்ஷவரம் செய்துகொள்வதில்லை.

அதிகம் கூறுவானேன்! அன்னியத் துணி தரித்தவன் முகத்தை நேரில் பார்க்கவும் மனம் சகிக்கமாட்டார். இது சிலருக்குப் பைத்தியக்காரச்செயலாகத் தோன்றலாமல்லவா? ஆம்; இவரிடந் தோன்றியது நாட்டுப் பைத்தியமே! இப் பைத்தியம் தூத்துக்குடி மக்களையும் பிடித்து உலுக்கியது. உதாரணமாகத் தூத்துக்குடி நாவிதர்கள் அன்னியத்துணி தரித்திருப்பவர்களுக்கு க்ஷவரம் செய்வதில்லை யென்று பிள்ளை யிடம் சத்தியம் செய்து கொடுத்தனர். "மானம் படவரின் வாழாமை முன்னினிது" என்று வீரம் பேசும் தமிழ்மக்க ளல்லவா!

பிள்ளையின் சுதேசி மனப்பான்மை பெருகி வளர் வதற்குப் பிறிதொரு வாய்ப்பும் நேரிட்டது. அதாவது தூத்துக்குடிக்கும், சிங்களத்திற்கும் இடையே வியாபாரப் பொருள்களை, "பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" யின் கப்பல்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தன. அக் கம்பெனி ஆங்கிலேயர் கையில் இருந்தது. நாட்டில் தோன்றிய சுதேசி இயக்கத்தை அவ்வெள்ளையர் கம்பெனி வெறுத்தது. மேலும் அக் கம்பெனி இந்திய வியா பாரிகட்குப் போதிய வசதி அளிக்கவில்லை யென்ற எண் ணம் இந்திய வியாபாரிக ளிடையே பரவியது. எனவே, தூத்துக்குடி வியாபாரிகள் தாமே கப்பலோட்டத் துணிந்து, அதை நிறைவேற்றிவைக்கப் பிள்ளையின் துணையை நாடினர்.

பிள்ளையவர்களின் பெருமுயற்சியால், 1906-ம் ஆண்டில் "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" தோன்றியது. இக் கம்பெனிக்குப் பாலவநத்தம் ஜமீன்தாரும், மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவருமாகிய திரு. பாண்டித்துரை சாமித் தேவர் தலைவராவார். நம் பிள்ளையவர்களே காரிய தரிசி. கம்பெனிக்குப் பங்கு சேர்க்கும் பணியில் ஈடுபட்

டுப் பிள்ளை பாரதநாடு முழுவதும் பவனிவந்தார். ஆங்காங்கு மக்களிடையே உணர்ச்சி ததும்பப் பேசிச் சுதேசியத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். இவரது பிரசாரத்தின் பயனாக இந்தியாவின் ஆக்கத்திற்குக் கைத்தொழில் வளர்ச்சியு வியா பார வளர்ச்சியுமே இன்றியமையாதவை என ம கள் உணர்ந்தனர்.

"ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

என்ற பொய்யா மொழிப்படி, பிள்ளையவர்களின் ஊக் கத்தாலும், உலையா உழைப்பாலும் கம்பெனிக்கு ஏராள மான பங்குதாரர்கள் சேர்ந்தனர். சென்னை மாகாணத்தை விட, பம்பாய், கல்கத்தா முதலிய மாகாணங்களில்தான் பங்குதாரர்கள் அதிகமாகச் சேர்ந்தனரென்றால், வட இந்தி யாவில் பிள்ளையவர்களுக்கு இருந்த செல்வாக்கு தெற்றென விளங்குகிறதன்றோ ?

சிதம்பரம் பிள்ளை, கம்பெனி ஆரம்பிக்கப்பட்ட சிறிது காலத்திற்குள் போதிய பணமில்லாதிருந்தும் கப்பல் வாங்க எண்ணிப் பம்பாய்க்குப் புறப்பட்டார்.

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
யருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படே னாயின் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணது
கொடியேகனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக"

என்று வஞ்சினங் கூறிய தலையாலங்கானத்துச்செருவென்ற செந்தமிழ்ப் பாண்டியன் நாட்டினராதலின் தானும், "கப்ப

லுடன் திரும்புவேன், இல்லையேல் கடலில் வீழ்ந்து மாள் வேன்" எனச் சபதம் செய்துச் சென்றார். என்னே! இவரது மன வலிமை! ஒன்று நாட்டுக்குழைப்பது; இல்லையேல் மாள்வது என்ற உறுதியையே கொண்டார். இச்சமயம் இவரது குடும்பத்துக்குச் சில இடுக்கண்கள் நேரிட்டன. அக்காலத்தில் இவரது ஏக புதல்வன் நோய்வாய்ப்பட்டு அபாயநிலையி லிருந்தான். மனைவி பூரண கர்ப்பவதியா யிருந் தார். நண்பர்கள், பிள்ளைபவர்களை ஒருமுறை ஊர்வந்து போகும்படி வேண்டியதற்கு, இடுக்கண் வருங்கால் நகும் உரனுடையராகலின், "என் மனைவியையும், புத்திரனை யும கடவுளிடம் ஒப்படைத்துள்ளேன்; எங்களுக்கு எது நன்மை யென்பதை என்னைவிட அவர் நற்குணர்வர்" என்று பதிலளித்தார். தமது குடும்பத்திற்குச் செய்யவேண்டிய கடமையைவிட தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமையே முக்கியமென உணர்ந்தார். இவருக்குக் கஷ்டம் நேரும்போதெல்லாம் இவர் சொல்வது இதுதான்: "நாம் கடவுளின் அருள்பெற்றவர்கள்; பாரதமாதா நம்மைக் கைசோரவிடமாட்டாள்."

பிள்ளையவர்கள் கப்பலுடன் தூத்துக்குடித் துறை முகம் வந்து சேர்ந்தார். கப்பல்களின் பெயர் 'லாவோ' என்பதாகும். 'காலியா' என்ற மற்றொரு கப்பலை திரு. எஸ். வேதமூர்த்தி முதலியார் பிரான்சுக்கு நேரில் சென்று வாங்கி வந்தார். சுதேசிக் கப்பல் கம்பெனி நாளுக்குநாள் வலுப்பெற்றுவந்தது. சுதேசிக் கப்பலி லேயே சரக்குகள் ஏற்றுவதென வியாபாரிகள் விரதம் கொண்டனர். முதலில் ஒரு சில வியாபாரிகள் கட்டுப் பாட்டை மீறி அன்னியர் கம்பெனியை ஆதரித்தனர். எனி னும், பிள்ளையின் பெருமுயற்சியால் அவர்களும் நல்வழிப்

பட்டனர். வியாபாரிகள்மட்டுமின்றிப் பிரயாணிகளும் சுதேசிக் கப்பல்களிலேயே பிரயாணம் செய்தனர். இவ் விதம் தமிழ்நாட்டு வியாபாரிகளும், கப்பல் பிரயாணிகளும் வெள்ளையர் கம்பெனியை வெறுத்துப் பிள்ளையவர்கள் கம் பெனியைப் பெரிதும் ஆதரித்தனர். இதை யறிந்த பிரிட் டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார், தங்கள் கப் பல்களின் கட்டணங்களை வெகுவாகக் குறைத்தனர். வர்த்த கர்களிடம் தரகர்களை யனுப்பிக் கெஞ்சினர்; ரயில்வே ஸ்டேஷனில் ஏஜண்டுகளை வைத்துத் தங்கள் கப்பலில்தான் சுதேசிச் சாமான்கள் போவதாகப் பொய் மொழிகள் புகன்று ஏமாற்றத்தலைப்பட்டனர். பதிலுக்குச் சுதேசிக் கம்பெனியாரும் ரயில்வே ஸ்டேஷனில் தொண்டர்களை நிறுத்திப் பிரயாணிகளுக்கு உண்மையை எடுத்துக்கூறிச் சுதேசிக் கப்பலிலேயே பிரயாணம்செய்யும்படி வற்புறுத்தி வந்தனர். பரதேசிக் கப்பல் கம்பெனியார் தூண்டுதலின் பேரில் சுதேசிக் கப்பல் கம்பெனிப் பிரசாரகர்களுக்குப் போலீஸ் அதிகாரிகள் இன்னல்கள் பல இழைத்தனர். உதாரணமாக, சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பல்லாற் றூனும் உதவி புரிந்துவந்த தூத்துக்குடி வக்கீல்களான திருவாளர்கள் கே. ஆர். வெங்கடராம ஐயர், பி. எல். வெங்குவையர், நாராயணசாமி சாஸ்திரி, இராமகிருஷ்ண ஐயர், பாலாஜி ராவ், குருநாத ஐயர் ஆகிய அறுவர்மீதும், பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாகவும், ஜாதித் துவேஷப் பிரசாரம் செய்ததாகவும் குற்றம் சாட்டிப் போலீ சாரால் ஜாமீன் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட் குற்றம் ருஜுவாகவில்லை யெனக் கூறி விடுதலை செய்தார்.

இவற்ருலெல்லாம் சுதேசிக் கப்பல் கம்பெனியாரின் செல்வாக்குக் குறையவில்லை யென்பதை யறிந்த வெள்ளையர் கம்பெனியார், தங்கள் கப்பலில் பிரயாணிகள் யாதொரு கட்டணமுமின்றி இலவசமாகப் பிரயாணம் செய்யலாமென விளம்பரப் படுத்தினர். இந்த மாய வித்தைகளால் மக்கள் மனஉறுதியைக் கலைக்க முடியவில்லை. அவர்கள் கொண்ட நாட்டுப்பற்று நாளுக்கு நாள்உரம்பெற்றுவந்தது. இவ்வளவுக்கும் பிள்ளையவர்களின் பிரசங்கங்களே காரணமாகும். பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகிக்கொண்டால் ஒரு லக்ஷரூபாய் தருவதாக அன்னியக் கப்பல் கம்பெனியார் கூறினர். பிள்ளை இணங்கவில்லை.

அரசியல் பிரவேசம்.

சிதம்பரம் பிள்ளை சுதேசியத்தின் மறுமலர்ச்சிக்குச் சேவை செய்வதோடு நின்றுரிலலை. அரசியலிலும் கலந்து பணியாற்றினர். நீண்ட கால அடிமைத்தனத்தின் பயனாக, இந்திய நாட்டின் செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்துவிட்டதைக் கண்டு பிள்ளையின் மனம் பதைத்தது. இங்கிலையிலிருந்து நாட்டை மீட்டு, குடிமக்கள் சொன்னபடி நடக்கும் குடியரசை யமைப்பதே இனித் தமது வேலையென எண்ணினர். அவ்வெண்ணத்தை நிறைவேற்ற இந்திய மக்களின் தாய்ச்சபையாம் காங்கிரஸ் மகாசபையில் சேரலானர்.

சிதம்பரம் பிள்ளை ஆண்டுதோறும் கூடும் காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதியாகச் செல்லுவார். அந்நாளில் காங்கிரஸில் பாமர மக்களின் ஆதிக்கம் வலுக்கவில்லை. பணக்காரர்களும், வக்கீல்களுமே அம்மகாசபையை நடத்தி வந்தனர். காங்கிரஸில் இரண்டு கட்சிகளிருந்தன. ஒன்று மிதவாதம்; மற்ருென்று அமிதவாதம். அமிதவாதிகளின் தலைவர் திலகர்பெருமான். பிள்ளை அமிதவாதிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர். மேலும், அவர் திலகரைத் தமது அரசியல் குருவாகக் கருதினர். காங்கிரஸில் மிதவாதிகளே எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் மிகுந்திருந்தனர். இவர்கள் ஆண்டுதோறும் காங்கிரஸ் சபையைக் கூட்டி, ராஜ வாழ்த்துக்குப் பின் அழகான தீர்மானங்கள் நிறைவேற்றுவதும் காரம் சாரமாகப் பேசுவதும் தவிர, செயலில் எதையும் செய்து காட்டத் துணிவு

கொண்டார்களில்லை. சுயராஜ்யம் என்றால் வெள்ளையருக்குப் பதில் கறுப்பர் ஆள்வது என்பதே, அவர்களது வியாக்கியானம்.

1907-ம் ஆண்டு சூரத் நகரில் கூடியகாங்கிரஸ், மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பூர்த்தியுறாமல் குழப்பத்தில் முடிந்தது. அதன் பின்னர் திலகரின் தலைமையில் தீவிரவாதிகள் ஒன்று கூடித் தங்கள் முற்போக்குக் கொள்கையை நாடெங்கும் பரப்பித் தேச மக்களைச் சுதந்திரப்போருக்குத் தயார்செய்வதெனத் தீர்மானித்தனர். திலகர், தமிழ் நாட்டில் தமது கொள்கைக்கு ஆதரவு தேடும் பொறுப்பு யாவையும் பிள்ளையிடமே ஒப்படைத்தார். **"தென்னாட்டிலேயே சிதம்பரம் பிள்ளை ஒருவர்தான் வீரர் என்பது திலகரின் கருத்து"** என ராஜாஜி சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் கூறினார். ஆகவே, அத்தகைய நம்பிக்கை வாய்ந்த சீடரிடம் திலகர் தமிழ்நாட்டை ஒப்படைத்ததில் ஆச்சரியமொன்றுமில்லையல்லவா?

அன்னிய ஆட்சியினால் விளையும் தீமைகளைப் பொது மக்களிடையே விளக்கிக் கூறவும், அவர்களைத் தேசாபிமானிகளாகச் செய்யும் நோக்கத்துடனும், சிதம்பரம் பிள்ளையவர்களின் முயற்சியால் 1908-ம் ஆண்டின் முதலில் திருநெல்வேலியில் **தேசாபிமான சங்கம்** ஒன்று நிறுவப்பட்டது. இச் சங்கத்தார் அடிக்கடி பொதுக் கூட்டங்கள் கூட்டிச் சுதேசிப்பற்று, அன்னிய சாமான் விலக்கு, தேசீயக் கல்வி ஆகியவற்றின் அவசியத்தை விளக்கிப் பிரசாரம் செய்து வந்தனர். சங்கம் நாளுக்கு நாள் வளர்பிறைபோல் வளர்வதாயிற்று. இச் சமயத்தில்

சந்நியாசிகோலம் பூண்ட சுப்பிரமணிய சிவா திருநெல் வேலிக்கு வந்தார். சிவா சிறந்த தமிழறிஞர்; பழுத்த தேசபக்தர்; அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையாளர். சிவாவின் வருகையை யறிந்த தேசாபிமான சங்கத்தார் அவரைத் தங்கள் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண் டனர். சிவா பொதுக் கூட்டங்களில் தொடர்ந்து பேசி வந்தார். சிவாவின் பிரசங்கத்தைக் கேட்க மக்கள் வெகு தூரத்திலிருந்தும் திரள்திரளாக வந்தனர். சிவா தூத்துக் குடிக்கும் வந்து அங்குப் பல பொதுக் கூட்டங்களில் பேசினார். இக்காலத்தில் சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப் பல் கம்பெனியின் காரியதரிசியாக விருந்ததால் கம்பெனி வேலை முடிந்ததும் மாலை நேரங்களில் தூத்துக்குடிக் கடற்கரையில் நடைபெறும் பொதுக் கூட்டங்களுக்கு வந்து சிவாவின் பேச்சைக் கேட்டு அகமகிழ்வார். "கற்றா ரைக் கற்றாரே காமுறுவர்" எனும் ஆன்றோர் மொழிப்படிச் சிதம்பரனாரும், சிவாவும் பிரியாநட்புகொண்டனர். நாளடை வில் பொது மக்களின் வற்புறுத்தலின்பேரில் பிள்ளை யும் பொதுக் கூட்டங்களில் பேசலானார். சிவாவின் பேச் சில் நெருப்புப் பொறி பறக்கும்; பிள்ளையின் பிரசங்கம் சூறைக்காற்றுபோல்சுழற்றியடிக்கும். ஏற்கெனவே எரிந்து கொண்டிருக்கும் தீயுடன் காற்றும் சேர்ந்தால் கேட்க வேண்டுமோ? சிவாவின் சங்கநாதத்துடன் பிள்ளையின் முரசொலியும் சேரவே மக்களின் மனத்தில் குடிகொண்டி ருந்த அச்சமென்ற மாசு அகன்றொழிந்தது; நாட்டுப்பற்று நன்கு சுடர்விட்டெரியலாயிற்று. பலவித இன்னல்களுக் கும் ஆளாகியிருந்த தொழிலாளர்களுக்கு இவர்களிருவரின் பிரசங்கங்கள்புத்துணர்ச்சியை யுண்டாக்கின.

---

5. தொழிலாளர் தலைவர்

தூத்துக்குடிக் கோரல் மில்லில் வேலை செய்யும் கூலியாட்கள் தங்கள் கூலி விகிதத்தை உயர்த்தவேண்டுமென்று மில் நிர்வாகிகளிடம் விண்ணப்பித்துக்கொண்டார்கள். நிர்வாகிகள் தொழிலாளர்களின் குறையைத் தீர்க்கச் சம்மதிக்கவில்லை. ஆகவே, தொழிலாளர்கள் ஒன்று திரண்டு ஒருமனப்பட்டு வேலைநிறுத்தம் செய்தனர். மெய்வருத்திக் கஷ்டப்பட்டுக் கூலிபெறும் நாட்களிலேயே அரைவயிற்றுக் கஞ்சிக்கும் போதாது அவதிப்படும் ஏழைத் தொழிலாளிகள் வேலைநிறுத்த நாட்களில் குடும்பத்தைக் காப்பதெங்ஙனம்? தொழிலாளர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் பட்டினி கிடக்க நேர்ந்தது. இதை யறிந்த பிள்ளை, கருணையுடன் முன்வந்து தனக்குத் தெரிந்த வக்கீல்களின் துணையுடன் பொதுமக்களிடம் பணம் வசூலித்து வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களுக்கு உதவி, அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றினர். இவரது வேண்டுகோளுக்கிணங்கி, வேலை நிறுத்தம் செய்துள்ள 2000 தொழிலாளர்களில் 1000 பேருக்குத் தூத்துக்குடி நகரவாசிகள் வேறு வேலைகளைக் கொடுத்து ஆதரித்தனர். வேலை நிறுத்த நாட்களில் தினசரிப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். அக்கூட்டங்களில் பிள்ளை பேசுவார்; தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு மில் நிர்வாகிகள் இணங்கின லொழிய பணியக்கூடாதெனப் பறை சாற்றுவார். இவரது உணர்ச்சிமிக்க வீர உரைகளைக் கேட்கும் தொழிலாளர்கள் உறுதியும், ஊக்கமும் கொண்டு வேலைநிறுத்தத்தை நீட்டித்து வந்தனர். இதனால் மில் நிர்வாகிகள் பிள்ளைமீது சீற்றங்

கொண்டனர். இவர் முதலாளிகளைக் கெடுக்கவேண்டு மென்ற கெட்ட எண்ணங்கொண்டு தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டினரென்றும், இவரது சொற்பொழிவுகளால் ஊரில் கலகமேற்படுமென்றும் மில் நிர்வாகிகள் மாஜிஸ்திரேட்டுக்கு மனுச்செய்தனர்.

மாஜிஸ்திரேட், பிள்ளையை நேரில் வரவழைத்து, இவரது பிரசங்கங்களால் பொதுஜன அமைதிக்குப் பங்கமேற்படுமெனத் தாம் நினைப்பதால், இனி எந்தப் பொதுக் கூட்டத்திலும் பேசக்கூடாதென எச்சரிக்கை செய்தார். மாஜிஸ்திரேட்டின் எச்சரிக்கையைப் பிள்ளை சிறிதும் மதியாது, "அஞ்சுவது யாதொன்று மில்லை, இனி அஞ்ச வருவது மில்லை." என்ற திடச்சித்தத்துடன் மேலும் தொழிலாளர் கூட்டங்களில் தொடர்ந்து பேசிவந்தார். கோரல் மில் வேலை நிறுத்தச்செய்தி மதுரையிலும் பரவியது. கோரல் மில் நிர்வாகத்திற்குட்பட்ட மதுரை பருத்தி ஆலைத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்ல மறுத்துவிட்டனர். தூத்துக்குடி வேலை நிறுத்தம் ஒரு வாரம்வரை நீடித்தது. கடைசியாக மில் நிர்வாகிகள் பணிந்துவிட்டனர். தொழிலாளர்களின் கூலியைச் சிறிதளவு உயர்த்திக் கொடுப்பதாக நிர்வாகிகள் வாக்களித்துப் பிள்ளையுடன் சமரஸம் செய்துகொண்டபிறகு தொழிலாளர்கள் வழக்கம்போல் வேலைக்குத் திரும்பினர். வேலை நிறுத்த நாட்களில் பொதுமக்களின் உணர்ச்சியைக் கண்டு பயந்த தூத்துக்குடி வெள்ளையர்கள் இராக்காலங்களில் நகரிலிருக்க அஞ்சிப் பெண்டு பிள்ளைகளுடன் துறைமுகம் சென்று இராப்போதைக் கப்பலிலேயே கழித்து வந்தார்களாம்.

சிதம்பரம் பிள்ளையின் சொற்பொழிவுகளால் மக்களின் மனதில் நாட்டுப்பற்றுப் பொங்கி யெழுவதைக்கண்டு அதி

காரிகள் அச்சங்கொண்டனர். எனவே, கலெக்டர் ஊரிலுள்ள பிரமுகர்களை ஒன்றுகூட்டி, கலகம் நிகழாமல் தடுக்கவும், பிரஜைகள் ராஜவிசுவாசிகளாக விருக்கவும் என்னசெய்யலாமென்று ஆலோசித்தார்; தூத்துக்குடியில் விசேஷ போலீஸ் படையை வைக்க விரும்புவதாகவும் கூறினார். கூட்டத்தில் பெரும்பாலோர் அதை எதிர்த்தனர். ஆனால் வக்கீல் திரு. அரங்கசாமி ஐயங்கார் என்ற இராஜவிஸ்வாசி மட்டும் மனப்பூர்வமாக ஆதரித்தார். விசேஷ போலீஸ் படையைத் தருவிக்காவிடில் சிதம்பரம் பிள்ளையின் பிரசங்கத்தால் ஊரே அழிந்துவிடுமென அலறினார். இவரது செய்கையை ஊரார் வெறுத்தனர். அன்றுமுதல் திரு. ஐயங்கார் தூத்துக்குடி மக்களின் பகைவரானார்.

ஒருநாள் ஐயங்கார் க்ஷவரம் செய்துகொள்ள அம்பட்டனை அழைத்தார். அம்பட்டன் க்ஷவரம் செய்துகொண்டே "என் சாமி! கலெக்டர் போலீஸ் பட்டாளத்தை அதிகப்படுத்தவேண்டும் என்றபோது நீங்கள் ஆதரவு காட்டியதாக ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்களே அது உண்மையா?" என்று கேட்டான்.

"அடே! அதை நீஎன் கேட்கிறாய்? அது உன் வேலையல்ல" என்று அதட்டினார் ஐயங்கார்.

"அப்படியானால், உமக்கு க்ஷவரம் செய்வதும் என் வேலையல்ல" என்று சொல்லிக்கொண்டே கத்தியை மடக்கிப் பெட்டியில் வைத்துக்கொண்டு கடுகி நடந்தான் அம்பட்டன்.

பாவம்! ஐயங்கார் அரை க்ஷவரத்தோடு அவதிப்பட நேர்ந்தது. எவ்வளவோ கெஞ்சியும் அம்பட்டன் திரும்பவில்லை. வேறு அம்பட்டர்களை அழைத்தார். யாரும்

இணங்கவில்லை. உச்சிநேரமாயிற்று; உணவருந்தியபாடில்லை. வீட்டிற்குள் சென்றால் வைதீகத்திற்கு விரோதமென மனைவி மறுப்பாள்; ஊருக்குள் சென்றால் தேசத்துரோகியென மக்கள் வெறுப்பர். என் செய்வார். "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்னும் பழமொழி ஐயங்கார்பால் உண்மையாயிற்று.

இனி வேறு வழியில்லையென உணர்ந்து கலெக்டரிடம் நேரில் சென்று, "துரையவர்களே! அம்பட்டர்களெல்லோரும் என்னைக் கைவிட்டனர். தாங்கள்தான் தயவு செய்யவேண்டும். போலீசுக்கு உத்தரவு கொடுத்தால் போதும்" என்று புலம்பினர்.

"அந்த வழிக்கு நான் வரமாட்டேன். என்னை நம்பிப் பயனில்லை." எனக் கைவிரித்தார் கலெக்டர்.

இந்நிலையில், ஐயங்கார் திண்டாடித் தெருவில் அலைந்து பின்னர் ரயிலேறித் திருநெல்வேலிக்குச் சென்று மீதியுள்ள மயிரையும் சிரைத்துக்கொண்டு ஊர்திரும்பினராம். என்னே நாவிதர்களின் நாட்டுணர்ச்சி!

6. சிதம்பரனர் சிறைப்படல்

அக்காலத்தில் காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவராய் விளங்கிய பிபின்சந்திர பாலர் சிறையிலிருந்து விடுதலை பெறும் நாளாகிய 1908-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ந்தேதியைத் திருநாளாகக் கொண்டாடுவதெனத் திருநெல்வேலித் தேசாபிமான சங்கத்தார் தீர்மானித்தனர். இதையறிந்த சர்க்கார் அதிகாரிகள் சஞ்சலங் கொண்டனர். மார்ச்சு 9-ந் தேதியன்று தூத்துக்குடியில் ஊர்வலமோ, பொதுக்கூட்டமோ நடத்தக்கூடாதென்று மாஜிஸ்திரேட் தடையுத்தரவு பிறப்பித்தார். மக்கள், தங்கள் நலத்தைக் கோரிப் பாடுபட்ட தலைவர் சிறைக் கஷ்டத்திலிருந்து விடுபட்டதற்குச் சந்தோஷத்தைத் தெரிவிக்கும் கொண்டாட்டங்களை நடத்துவதைக் கூட அனுமதிக்க அதிகாரவர்க்கம் மனங்கொள்ளவில்லை. பாலர் ஏகாதிபத்தியத்தின் எதிரியென்ற நினைப்புப் போலும்! மாஜிஸ்திரேட், சிதம்பரம் பிள்ளையை நேரில் வரவழைத்து பாலர் விடுதலைக் கொண்டாட்ட சம்பந்தமாய் நடைபெறும் பொதுக்கூட்டங்களிலோ, ஊர்வலங்களிலோ கலந்துகொள்ளக்கூடாதென்று எச்சரிக்கை செய்தார். அம்மாதிரி எழுதித் தரும்படி பிள்ளை கேட்டதற்கு, மாஜிஸ்திரேட் மறுத்து விட்டார். பிள்ளையின் தீவிரப் போக்கையும், அதிகாரிகளின் அடக்குமுறையையும் கண்ட "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி"யின் நிர்வாகிகள் பொதுக்கூட்டங்களில் பேச வேண்டாமென பிள்ளையை வேண்டிக் கொண்டனர்.

முன்னே செய்த ஏற்பாட்டின்படி மார்ச்சு 9-ந்தேதியன்று பாலரின் விடுதலைத் திருநாள் திருநெல்வேலியில்

சிறப்பாக நடைபெற்றது. கலகம் ஏதும் நிகழாதிருக்கப் போலீஸ் அதிகாரிகள் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். சிதம்பரனரும், சிவாவும் ஆயிரக் கணக்கான மக்களடங்கிய ஊர்வலத்தில் கலந்துகொண்டதுடன் பொதுக்கூட்டத்திலும் பேசினர்கள்.

இவ்விதமாகத் திருநெல்வேலி ஜில்லா வங்காளத்தின் சாயைபோன்று விளங்கியது. எங்கும் சுதந்திரப் பேச்சும் வந்தேமாதர முழக்கமும் ஒலித்தன. வெள்ளையரைக் கண்டால் வெறுப்பு; அதிகாரிகளைக் கண்டால் அலட்சியம்; பரதேச வஸ்திரந் தரித்தவரைக் கண்டால் பகிஷ்கரித்தல்; அந்நியக் கப்பல் கம்பெனியை ஆதரிப்பவர்களுக்கு—பரதேச ஆடையை அணிந்தவர்களுக்கு—சுதேசிக் கிளர்ச்சியை அடக்குவதில் அதிகாரிகளுடன் ஒத்துழைக்கும் தேசத்துரோகிகளுக்கு வண்ணன் துணி வெளுக்கமாட்டான்; அம்பட்டன் க்ஷவரம் செய்யமாட்டான்; பலகாரக் கடைக்காரன் பலகாரந் தரமாட்டான்; வண்டிக்காரன் வண்டியோட்டமாட்டான். இவ்வாறு திருநெல்வேலி ஜில்லாவெங்கும் பிள்ளை இட்டது சட்டமாயிற்று. இவர் வார்த்தைக்கு மறுவார்த்தை கூறுவாரில்லை. இவரது ஆணை பிறந்தால் அனலையும் விழுங்க மக்கள் தயாராயிருந்தனர். பிள்ளையின் தீவிரப் போக்கையும், பொது மக்களிடையே அவருக்குள்ள செல்வாக்கையும் கண்டு அதிகாரிகள் அச்சங் கொண்டனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நிலைத்திருக்கச் சிதம்பரம் பிள்ளையைச் சிறைசெய்தே தீரவேண்டுமென்று முடிவு செய்தனர். தூத்துக்குடியிலேயே கைது செய்வதென்ருல், ஜனங்கள் ஆத்திரங் கொண்டு கலகம் விளைவிப்பரென்று அஞ்சிய கலெக்டர் விஞ்ச், திருநெல்வேலிக்கு வந்து தன்னைச் சந்திக்கவேண்டுமென பிள்ளைக்கும், சிவாவுக்கும் நோட்டீஸ் அனுப்பினர்.

அதன்படி சிதம்பரனாரும், சிவாவும் மார்ச்சு மாதம் 12-ந் தேதி திருநெல்வேலி சென்று கலெக்டரைக் கண்டு பேசினர். திருநெல்வேலிஜில்லாவைவிட்டு உடனே வெளியேறச் சம்மதிக்கவேண்டுமென்றும், அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதில்லையென நன்னடக்கை ஜாமீன் தரவேண்டுமென்றும் சிதம்பரம் பிள்ளையிடம் கலெக்டர் கூறினார். இச்சமயத்தில், பிள்ளைக்கும், கலெக்டருக்கும் கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது. பிள்ளை ஜாமீன் தரவும், ஜில்லாவை விட்டு வெளியேறவும் தன்னால் இயலாதென்றும், வேண்டுமானால் தன்னைக் கைது செய்யலாமென்றும் கூறினார். உடனே பிள்ளையும், சிவாவும் கலெக்டர் முன்னிலையிலேயே கைது செய்யப்பட்டார்கள். பிள்ளையின் இல்லத்தையும் போலீசார் சோதனை செய்து சில தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றினர்.

7. திருநெல்வேலிக் கலகம்

சிதம்பரம் பிள்ளை கைது செய்யப்பட்ட செய்தி திருநெல்வேலி முழுவதும் காட்டுத் தீயைப்போன்று சில நிமிஷங்களுக்குள் பரவியது. மறுநாள் (மார்ச்சு மாதம் 13-ந் தேதி) வர்த்தகர்கள் கடையடைத்தனர்; வண்டிக் காரர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்; மாணவர்கள் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லாது பவனி வந்தனர். இவ்விதமாக ஊர் முழுவதும் ஹர்த்தாலும், அமளியுமாக விருந்தது. தேச பக்தர்களும், தேசீய ஸ்தாபனங்களும் பிள்ளையைக் கைது செய்ததைக் கண்டித்துப் பொதுக்கூட்டங்களும், ஊர்வலங் களும் நடத்தினர். நகரில் அமைதியைக் காக்கப் போலீஸ் படை தருவிக்கப்பட்டது. தொழிலாளர்கள் சிறு சிறு கூட்டங்களாகச் சேர்ந்து நகரின் பல பாகங்களிலும் ஊர் வலம் சென்றனர். பொறுமையிழந்த சிலர் கலகம் விளை வித்தனர். வீதியிலிருந்த முனிசிபல் விளக்குகளெல்லாம் பிடுங்கி யெறியப்பட்டன. முனிசிபல் மண்ணெண்ணெய்க் கிடங்கு தீக்கிரையாயின. சிலர், முனிசிபல் காரியாலயத்தில் புகுந்து தஸ்தாவேஜுகளை வெளியில் கொண்டுவந்து நெருப் பிட்டுக் கொளுத்தினர். சர்ச் மிஷன் கல்லூரிக்குள் புகுந்து ரேவரேண்டு ஷாப்டர் என்னும் தலைமை ஆசிரியரைப் பிடித்து, 'வந்தேமாதரம்' என்று சொல்லும்படி வற்புறுத்த, அவரும் மூன்று முறை 'வந்தேமாதரம்' என்று உரத்து உச்ச ரித்தார். அக்கல்லூரியிலுள்ள மேஜை, நாற்காலி முதலிய சாமான்களை உடைத்து வீதியில் விட்டெறிந்தனர். பின்னர், போலீஸ் ஸ்டேஷனுக்குள் புகுந்து துப்பாக்கி முதலிய ஆயுதங்களைச் சேதப்படுத்தியதுடன் கட்டிடத்

தையும் தீ வைத்துக் கொளுத்தினர். இவ்விஷய மறிந்த கலெக்டரும், போலீஸ் சூபரின்டெண்டெண்டும் விரைந்து வந்து கலகத்தை யடக்க முயன்றனர். கலெக்டர் தன் கைத் துப்பாக்கியால் ஜனங்களை நோக்கிச் சுட்டார். இதனால் நால்வர் மாண்டதுடன் மூவர் படுகாயமடைந்த னர். வலம்புலியம்மன் கோயிலில் பூஜை செய்யும் 17-வயது சிறுவன் வீதியில் வந்துகொண்டிருக்கையில் கையிலிருந்த தேங்காய் தவறி கீழே விழவும், அதை எடுக்க இறங்கினான்; அவ்வளவுதான் கலெக்டரின் கைத் துப்பாக்கியிலிருந்து புறப் பட்ட குண்டு சிறுவன் மண்டையில் பாய்ந்தது; அங்கேயே மாண்டான். ஆஹா! எவ்வளவு நேர்த்தியான குறி!! ரொட்டிக் கடையில் வேலை செய்யும் 18-வயதுப் பையன் கடையைப் பூட்டிக்கொண்டு கையில் சாவியுடன் வீடு செல்கையில் சுடப்பட்டு மாண்டான். கலெக்டரின் கைத் துப்பாக்கிக்கு இரையான நால்வரில், இருவர் இந்துக்கள்; ஒருவர் முஸ்லீம்; மற்றொருவர் ஹரிஜனர். இறந்தவர் களின் பிரேதத்தை அப்புறப்படுத்தவோ, காயமடைந்தவர் களுக்குச் சிகிச்சை செய்விக்கவோ அதிகாரிகள் கவலை கொள்ளாது, வீதியிலேயே விட்டுச் சென்றனராம். மாலை வரை பிரேதங்கள் வீதியிலேயே கிடந்த பின்னர், அவை களின் உறவினர்கள் வந்து எடுத்துச் சென்றனர். கலகக் காரர்கள் கற்களா லடித்ததால் இன்ஸ்பெக்டருக்கு மண்டை உடைந்தது; கலெக்டருக்குச் சொற்ப காயம். கலகம் மூன்று நாட்கள்வரை தொடர்ச்சியாக நடைபெற்றது. இதே சமயத்தில் தூத்துக்குடியிலும், தச்சநல்லூரிலும் கடை யடைப்பும், கலகமும் நிகழ்ந்தன. தச்சநல்லூரில் யூனியன் ஆபீஸ் கொளுத்தப்பட்டது. எனினும், ஆரம் பத்திலேயே கலகம் அடக்கப்பட்டது. சாதாரண போலீ

சாரால் திருநெல்வேலியில் அமைதியை நிலவச்செய்வது அசாத்தியமென்றுணர்ந்து, சென்னை சர்க்கார் தண்டப் போலீஸ் படையைத் திருநெல்வேலி, தூத்துக்குடி, தச்சநல்லூர் ஆகிய விடங்களுக்கு அனுப்பிவைத்து அப்படையினர்க்காகும் செலவைப் பொதுமக்களிடமே வசூல் செய்யப்படுமென அறிவித்தனர். கனம் குருசாமி ஐயரும் மற்றும் இரு பிரமுகர்களும் சென்னைக்கு வந்து, தண்டப் போலீசை அகற்றவேண்டுமென கவர்னரை வேண்டினர். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் கலகத்தை யடக்கப் போலீசாருக்கு உதவி புரியாததால் தண்டப் போலீஸை அனுப்ப நேரிட்டதென்றும், ஆகவே மீண்டும் அமைதி நிலவும்வரை திருப்பி யழைக்க முடியாதென்றும் கவர்னர் கூறினர். பிரமுகர்கள் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினர். இந்தக் கலகத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறித் தச்சநல்லூர், திருநெல்வேலி, தூத்துக்குடி முதலியவிடங்களில் 89 பேர்களைப் போலீசார் கைதுசெய்து வழக்குத் தொடுத்ததில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் பலவித தண்டனைகள் அடைந்தனர்.

பிள்ளையையும் சிவாவையும் ஜாமீனில் விட மாஜிஸ்திரேட் மறுத்துவிட்டதால் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தனர். நீதிபதிகள் மனுவை அங்கீகரித்து ஜாமீனில் விடும்படி உத்தரவிட்டனர். பிள்ளைக்கு ஜாமீன் தர பிரமுகர்கள் பலர் போட்டியிட்டார்கள். ஆனால், சந்நியாசி சிவாவுக்கு ஜாமீன்தர யாரும் முன்வரவில்லை. எனவே, நண்பர் சிவாவைச் சிறையில் தனியாகவிட்டுத் தான்மட்டும் ஜாமீனில் வெளிவர முடியாதென்று பிள்ளை கூறிவிட்டார். துன்பம் நேர்ந்தவிடத்தும் துணைவரைக் கைவிடப் பிள்ளையின் மனம் ஒருப்படவில்லை.

8. கொடுந் தண்டனை

1908-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23, 26 தேதிகளிலும், மார்ச்சு 1, 3 தேதிகளிலும் இராஜ நிந்தனையாகப் பேசியதாக 124-எ பிரிவுப்படியும், சுப்பிரமணிய சிவாவுக்கு இடமும், உணவுமளித்து ஆதரித்ததாக 153-எ பிரிவுப்படியும் சிதம்பரம் பிள்ளைமீது போலீசார் வழக்குத் தொடுத்தனர். இவ்வழக்குத் திருநெல்வேலி டிப்டி மாஜிஸ்திரேட் முன்பு மார்ச்சு மாதம் 26-ந் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிள்ளையவர்களின் சொற்பொழிவுகளில் ஆக்ஷேபகரமானவையென பிராசிகூஷன் தரப்பில் கூறப்பட்டவை பின் வருமாறு:—

"ஜனங்கள் ஒன்று சேர்ந்தால் ஐரோப்பியரை விரட்டி விடலாம். நாமெல்லோரும் ஒன்றுசேர்ந்துவிட்டோம் எனத் தெரிந்தால் போதும் அவர்களே போய்விடுவார்கள்."

"இந்தியாவில் 50 ஆயிரம் வெள்ளையர்கள் உள்ளனர். பலவந்தமாக அவர்களை வெளியேற்றுவது கஷ்டமன்று. ஆனால், இந்தியர்கள் பலாத்காரம் செய்யக்கூடாது. என்றாலும் வெள்ளையருக்குப் பயப்படவேண்டியதில்லை."

"இந்தியர்கள் தாங்கள் தீர்மானித்தபடி அன்னியதேசத் துணி, சர்க்கரை, எனமல் பாத்திரம் முதலிய பொருள்களை வாங்காமலிருந்தால் ஆங்கிலேயர்கள் தாங்களே இந்தியாவை விட்டுப் போய்விடுவார்கள்."

"இன்னும் பிரிட்டிஷ் (B. S. N.) கம்பெனிக்குச் சிலர் உதவி செய்கிறார்கள். நான் இனி அவர்களைக் கேட்கப்போவதில்லை. சில சுதேசிகள் என்னிடம் வந்து அப்படிப்பட்டவர்

களுக்குக் கெடுதல் செய்வதாய்க் கூறினார்கள். நான் அவர்களைத் தடுத்தேன். தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டும் என்று சொன்னார்கள்.''

"நாவித சகோதரர்கள் பரதேச வஸ்திரந் தரித்தவர்களுக்குத் தாங்கள் வேலை செய்வதில்லை எனச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவன் வந்தால் கத்தியால் அவன் தலையைத் தொட்டு அனுப்பிவிடுவார்கள்.''

"சுயராஜ்யத்தைத் தவிர அன்னிய ஆட்சியை விரும்புகிறவர்களுண்டா? வருவதெல்லாம் வரட்டும்; நாம் எதற்கும் பயப்படவேண்டியதில்லை.''

பிள்ளையவர்களுக்காகத் தஞ்சை வக்கீல் திரு. என். கே. இராமசாமி ஐயர், கோர்ட்டில் தோன்றி வாதாடினார். வழக்கு நடந்து கொண்டிருக்கையில், டிப்டி மாஜிஸ்திரேட் தமது வக்கீலிடம் நேர்மையாக நடந்துகொள்ளவில்லையெனக் கூறி பிள்ளை எதிர்வழக்காட மறுத்துவிட்டார். மாஜிஸ்திரேட், பூர்வாங்க விசாரணைக்குப் பிறகு வழக்கை அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுப்பிவைத்தார். செஷன்ஸ் கோர்ட்டில் நீதிபதி பின்ஹே முன்பு வழக்கு விசாரணை சுமார் இரண்டு மாதகாலம் நடைபெற்றது. பிள்ளையவர்களுக்காக வக்கீல் திரு. சடகோபாச்சாரியாரும், சர்க்கார் தரப்பில் பாரிஸ்டர் ரிச்மண்டும் தோன்றி வாதித்தனர். பிள்ளை தரப்பில் பிரபலஸ்தர்கள் பலர் சாட்சியம் கூறினர். இவருக்கு விரோதமாகப் போலீஸ் தரப்பில் சாட்சியம் கூறியவர்களில் பெரும்பாலோர் போலீஸ்காரர்களும், பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைச் சேர்ந்தவர்களுமாவர்.

ஜூலை மாதம் 7-ந் தேதி நீதிபதி பின்ஹே தீர்ப்புக் கூறினார். பிள்ளை குற்றவாளி யெனத் தீர்மானித்து இராஜ

நிந்தனைக் குற்றத்திற்காக 10-வருடத் தீவாந்தரத் தண்டனை யும், சிவாவுக்கு உடந்தையாக விருந்த குற்றத்திற்காக 10-வருடத் தீவாந்தரத் தண்டனையும் விதித்து, இரண்டு தண் டனைகளையும் ஒன்றன் பின் ஒன்ருக (இருபது வருடம்) அனுபவிக்கவேண்டுமெனக் கூறினர். செஷன்ஸ் நீதிபதி பின்ஹே அளித்த தீர்ப்பின் முக்கிய பகுதிகள் பின் வருமாறு:—

"சிதம்பரம் பிள்ளை தொழில் அபிவிருத்திக்கு உழைப்பதாக வேஷம் பூண்டு ஆங்கிலேயர்களுக்கும், இந்தியர்களுக்கும் இடையே ஜாதிப் பகைமையை யூட்டிவந்தா ரென்ற குற்றச் சாட்டை மறுப்பதற்கில்லை. பிள்ளை, பெரிய இராஜத் துரோகி; சிவா அவர் கையில் அகப்பட்ட கோல். திருநெல்வேலிக் கலகத் திற்கு இவர்கள்தான் காரணம்."

"பிள்ளை கைத்தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு சுதந்திரம் பெறுவதற்கான மார்க்கங்களை மக்க ளுக்குப் போதித்திருக்கிறர். கோரல் மில் வேலை நிறுத்தத்தை யுண்டாக்கியவர் இவரே."

"இந்தியாவில் அரசியல் விஷயமாகப் பேசச் சட்ட ரீதி யான சமயமே யில்லை. இங்கிலாந்தில் அரசியல் விஷயமாகப் பேசுகிறவன் தன்னுடைய வாக்காளர்களைப் பார்த்துப் பேசுகி றன். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கிறது. அந்த வாக்கை அடுத்த தேர்தல் சமயம் வரும்போது தன் பக்கமாய் கொடுக்க அவர்களைத் தூண்டும் நோக்கத்துடன் பேசுகிறன். இந் நாட்டிலோ அம்மாதிரிச் சந்தர்ப்ப மிருப்பதாகக் கூற முடியாது. திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் உள்ள சாதாரண மக்க ளுக்கு ஓட்டில்லை. ஆகையால் ஒருவன் ஜனங்களைக் கூட்டி வைத்துப் பேசக் கனவிலும் நினைக்கமாட்டான். ஏனெனில் தங்க ளுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவர்களுக்குச் சக்தியில்லை.

இந்நாட்டில் அரசியல் விஷயத்தைப்பற்றிப் பேசும் ஒருவன் யாரைப் பார்த்துப் பேசுகிறானோ அவர்களுக்குச் சட்டப்படி அமைந்திருக்கும் சக்தி யெதையும் உபயோகிப்பதற்கில்லை. பின் என்ன எண்ணத்தோடு பேசுகிறான்? ஜனக் கூட்டத்துக்குள்ள ஒரே சக்தியைப் பிரயோகிக்கவேண்டுமென்றுதான் பேசக்கூடும். அதாவது, ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள உடற் பலத்தை உப யோகிக்கும்படித் தூண்டித்தான் பேசுகிறான். இது மகா அபாய மானதாகும்.''

"அன்னியப் பொருள்களை விலக்குமாறு பேசலாம். ஆனால் சாதாரண ஜனக்கூட்டத்தைப் பார்த்து இப்படிப் பேசினால் கேட்கும் ஜனங்கள் அவற்றோடு நிற்பார்களா? சர்க்காரைப் பகிஷ்கரிக்கவேண்டு மென்றும் பேசப்பட்டது. இது 124-அ பிரிவின்கீழ் அபாயகரமான எல்லைக்குப் போவதாக ஏற்பட வில்லையா?''

சட்டஞானம் பெற்ற வழக்கறிஞரை; அரசியல் தலைவரை; கப்பலோட்டிய கருணையாளரை; ஏழைகள்பால் இரக்கம்கொண்ட ஏந்தலை; செந்தமிழ் வல்ல சிதம்பரனாரைக் கொலையும், கொள்ளையும் புரிந்த கொடியவர்களான கிரிமினல் குற்றவாளிகளுடன் இருபதாண்டுகள் பூலோக நரகமான அந்தமானில் வாழுமாறு நீதிபதி பின்ஹே தீர்ப் பளித்தார். முப்பத்தைந்தே வயதுடைய பிள்ளையவர்கள் பெற்ற தாய் தந்தையரையும், இளம் மனைவியையும், முறையே இரண்டு, நான்கு வயதுடைய பச்சிளம் பாலகர் களையும் பிரிய நேரிட்டது.

வீரத் தமிழரான பிள்ளை, தமக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையால் மனங் கலங்கவில்லை. உதாரணமாக, இவரைக் கோர்ட்டிலிருந்து சிறைக்குக் கொண்டு செல்லுகையில், தம் எதிரில் முகவாட்டத்துடன் நின்றிருந்த தூத்துக்குடி

மாசிலாமணிப் பிள்ளையை நோக்கி, "தம்பி! பயப்படாதே! கிடக்கிறான் இந்தப் பயல்! இருக்கிறது ஹைக்கோர்ட்டு; அடித்துத்தள்ளி வந்துவிடுகிறேன்." என்று கூறிச் சிறைச் சாலையாம் தவச்சாலை நண்ணினார் அஞ்சா நெஞ்சுடைய அண்ணல் சிதம்பரனார்.

தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவரான சிதம்பரம் பிள்ளைக்கு விதிக்கப்பட்ட கொடுந்தண்டனையால், தமிழ் நாட்டில் மட்டுமன்றி இந்தியா வெங்கும் பேரதிர்ச்சி யுண்டாயிற்று. பத்திரிகைகள் நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பைக் கடுமையாகத் தாக்கித் தலையங்கங்கள் எழுதின. அவற்றில் சில பின்வருமாறு :—

"ஸ்டேட்ஸ்மன்":—"தேசபக்தர் சிதம்பரம் பிள்ளைக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் நியாயத்திற்கும், சட்டத் திற்கும் விரோதமானவை. பிள்ளையவர்களின் தியாகம் மகத்தானது."

"வங்காளி":—"நீதிபதி பின்ஹேயின் சித்தாந்தங்கள் இத்தேசத்தில் அமுலுக்கு வரும் நாள், துரைத்தனத்தாருக் கும், ஜனங்களுக்கும் கெட்ட நாளாகும். சுதேசிக் கைத் தொழில் வளர்ச்சிக்குப் பிள்ளை பாடுபட்டது குற்றமானால் இந்தியா அனைவரும் குற்றவாளிகளே."

"அமிர்த பஜார்":—"பிள்ளையவர்களுக்கு விதிக்கப் பட்ட கொடுந் தண்டனையால், பிரிட்டிஷ் நீதி அதிகாரத் திற்கே பெரும் அபகீர்த்தி யுண்டாகும்."

"வந்தேமாதரம்":—"நீதிபதி பின்ஹேயின் கருத்துப் படி பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பதிலாகச் சுதேச அரசாட்சியை விரும்புவது அரச நிந்தனை! சுதந்தரத்திற்காகச் சிதம்பரம்

பிள்ளையைப் போன்று துன்பமனுபவிக்கும் ஒவ்வொரு வரும் எதேச்சாதிகாரத்தின் பிரேதப் பெட்டியின்மேல் ஒவ்வொரு ஆணியை அறைகின்றனர்."

"சுதேச மித்திரன்"—"இவ்வளவு கொடிய தண்டனை விதிக்கப்படுமென்று நாம் கனவிலும் கூட கருதவில்லை. நினைக்கையிலேயே மயிர்க்கூச்செறிகிறது; கை நடுங்குகிறது. இந்தத் துக்கத்தைத் தென்னிந்திய மக்கள் எப்படிச் சகிப்பார்கள். பிள்ளை, கப்பல் கம்பெனியை நிறுவாமலும் சுதேசிக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்குப் பாடுபடாமலும், கோரல் மில் வேலை நிறுத்தத்தில் ஏழைத் தொழிலாளர்களுக்கு உதவாமலும் இருந்திருந்தால், நீதிபதி பின்ஹே குறைந்த தண்டனை விதித்திருப்பார்போலும்! பிள்ளை தேசாபிமானங்கொண்டு பொதுஜன நன்மைக்காக உழைத்தது அவருக்குக் கேடாய் முடிந்தது."

சிதம்பரம் பிள்ளைக்கு ஆயுள் அளவும் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்ட செய்தியைக் கேட்டு அப்போது இந்தியா மந்திரியாக விருந்த லார்டு மார்லி என்பவர் மனம் பதைத்தார். அவர் இராஜப் பிரதிநிதி லார்டு மின்டோவுக்கு பின்வருமாறு எழுதினர் :—

> திருநெல்வேலி, தூத்துக்குடி மனிதர் (சுப்பிரமணிய சிவா, சிதம்பரம் பிள்ளை) இருவருக்கும் விதித்துள்ள தண்டனையைச் சிறிதும் ஆதரிக்க இயலாது. அடுத்த மெயிலில் அத்தீர்ப்பு என் பார்வைக்கு வரும்; அத்தண்டனைகள் நிலைக்கா. கொடுமையான இக்காரியங்களை எக்காரணங் கொண்டும் நான் ஆதரிக்க முடியாது. இந்தப் பிழைகளையும் முட்டாள் தனங்களையும் நீங்கள் உடனே கவனிக்கவேண்டும். ஒழுங்கை நாம் நிலை நாட்ட வேண்டியதுதான். கொடுமை மிதமிஞ்சிவிடின் ஒழுங்கென்பது நிலைக்குமோ? மற்று வெடிகுண்டுக்கு அதுவே மார்க்கமாம்"

சிதம்பரம் பிள்ளை, தமக்குச் செஷன்ஸ் நீதிபதி விதித்த தீவாந்தர தண்டனையை ரத்துச் செய்யவேண்டுமெனக்கோரி ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். 1908-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ந்தேதி பிரதம நீதிபதி ஆர்னல் வைட் நீதிபதி மன்ரோ ஆகியவர்கள் முன்பு அப்பீல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிள்ளைக்காக திருவாளர்கள் சடகோபாச்சாரியார், வேங்கடாச்சாரியார், நரசிம்மாச்சாரியார் ஆகிய மூவரும் ஆஜராகிச் சிதம்பரம் பிள்ளையின் சொற்பொழிவுகளெல்லாம் தொழில் அபிவிருத்தியைப் பற்றியதே யொழிய இராஜாங்கச் சீர்திருத்தம் பற்றிய தன்று என்றும், ராஜ நிந்தனையாகப் பேசியதாகப் போலீஸ் தரப்பில் கூறப்பட்டது சரியல்ல வென்றும், மேலும் பிள்ளையவர்கள், சிவாவுக்குச் சந்நியாசி என்ற காரணத்தினால் தங்க இடமும்' உணவும் அளித்ததால், சிவாவுக்கு உடந்தை யிருந்ததாகச் சாட்டப்பட்ட குற்றமும் சரியல்லவென்றும் வாதித்தார்கள்.

நவம்பர் மாதம் 4-ந் தேதி நீதிபதிகள் தீர்ப்புக் கூறினர். நீதிபதிகள் தங்கள் நீண்ட தீர்ப்பில், ஆங்கிலேயர் ஆளும் வகுப்பாரா யிருப்பதை ஒழிக்கவேண்டு மென்பதே பிள்ளையின் நோக்கமென்றும், அவர் அந்நிய சரக்குப் பகிஷ்காரத்தை வற்புறுத்திப் பேசியது, சுதேசக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக வல்லாமல் ஆங்கிலேயரைத் தொலைக்கவேண்டு மென்பதற்காகவே யென்றும், ஆகவே சிதம்பரம்பிள்ளை குற்றவாளியென செஷன்ஸ் ஜட்ஜ் பின்ஹே தீர்மானித்ததைத் தாங்களும் ஒப்புக்கொள்ளுவதாகவும், எனினும், உடந்தைக் குற்றத்திற்கு விதிக்கப்பட்ட 10-வருஷ தீவாந்தர தண்டனையை 6-வருஷமாகவும், இராஜ நிந்தனைக் குற்றத்திற்கு விதிக்கப்பட்ட 10-வருஷ தண்டனையை 4-வருஷமாகவும் குறைப்பதாகவும், இவ்விரண்டு தண்டனை

களையும் ஒன்றின்பின் ஒன்றாக அனுபவிப்பதற்குப் பதிலாக ஏக காலத்தில் அனுபவித்தாற் போதுமென்றும் கூறினர்.

எப்படியேனும் பிள்ளையை விடுவிக்கவேண்டுமென்று அவாக்கொண்ட இவரது நண்பர்கள் ஹைக்கோர்ட் தீர்ப்பில் திருப்தி கொள்ளாமல் பெரு முயற்சி செய்து பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்தனர். அதன்பேரில் அந்தமான் சிறைவாசம் ரத்து செய்யப்பட்டு ஆறு வருடக் கடுங்காவல் தண்டனையாக மாற்றப்பட்டது.

9. சிறையில் துன்பம்.

சிதம்பரனார் தமது தண்டனைக் காலத்தைக் கோயம்புத்தூர், கண்ணனூர் சிறைகளில் கழித்தார். அந்நாளில் சிறைகள் தேசபக்தர்களால் நிரப்பப்படவில்லை. ஆகவே பிள்ளையவர்கள் தன்னந் தனியராய்த் தவங்கிடந்தார். இன்றுள்ளனபோல் வகுப்பு முறைகளும், பிறவசதிகளும் அன்றில்லை. அரசியல் கைதிகளுக்கெனத் தனி உரிமைகள் எதுவும் வழங்கப்படவில்லை. சிதம்பரனார் சிறையிற்பட்ட துன்பம் கொஞ்சமன்று. கல் நெஞ்சம் படைத்த சிறை யதிகாரிகள் பிள்ளை யவர்களைக் கொலை, திருடு முதலிய பாதகச் செயல்களைப் புரிந்து தண்டனைப் பெற்ற கொடியவர்களைவிடக் கேவலமாக நடத்தினர். அறுசுவை யுண்டு அரசர்போல் வாழ்ந்த சிதம்பரச் சீமான் சிறையில் கேழ்வரகு கூழுண்டார். சிறையிலிருந்து அவர் தம் மனைவிக்குக் கவி ரூபமாக எழுதிய கடிதமொன்றில்,

முக்கனியின் சாறெடுத்து முந்திரி ஏலம் வாதம்
அக்காரம் தேன்பாலோ டட்டேட்டக்—கக்குமென்று
கேழ்வரகின் கூழுண்டல் கேடறியாய் நின்மலர்த்தாள்
வாழ்வதோக்கும் கற்காட்டில் வந்து.

வாழைப்பழம் கடிக்க மாட்டாத என்பற்கள்
ஏழைச்சிறூர் கடிக்க ஏலாத—காழுடையாய்
சீடைதினல் இந்நாள் சிறுகுடிலில் நிற்பதோக்கும்
மேடையையும் ஏற்காதேன் மெய்.

எனச் சிறையில் தனக் களிக்கும் உணவின் தன்மையைப் பற்றிக் கூறுகின்றார். பொதுஜனக் கிளர்ச்சி—பத்திரிகைகளின் கண்டனம்—கணக்கற்ற உண்ணாவிரதங்கள்; உயிர்த்

தியாகங்கள்—காங்கிரஸ் ஆட்சியில் சீர்திருத்தங்கள் இத்தனைக்கும் பிறகு இன்றுங்கூட, 'சி' வகுப்பு அரசியல் கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவில் புழு, பூச்சிகளும், கல்லும் மண்ணும் கலந்திருக்கின்றன வென்றால், இன்றைக்கு 33-ஆண்டுகளுக்கு முன்னர், அதிலும் அரசியற் கைதிகள் என்போர் பிள்ளையைத் தவிர வேறெவரும் சிறையிலில்லாத அந்நாளில் சிறை உணவின் கேவலத்தன்மையைக் கூறவும் வேண்டுமோ ?

சிதம்பரம் பிள்ளையவர்கள் கேவலமான உணவருந்தி உடல்வலி குன்றி உயிருக்கு ஊசலாடும் நிலைமையிலிருந்த போதும் கடுமையான வேலைகளைச் செய்யும்படிக் கட்டளையிட்டனர் சிறையதிகாரிகள். "செக்கு மாடுகள்போல் உழைத்து ஏங்குகின்றார் அந்தக் கரும்புத் தோட்டத்திலே" என்று தோட்டத்தொழிலாளர் துயரைக்குறித்து பாரதியார் பாடினார். செக்கு மாடு போல் அல்ல. மாடாகவே செக்கு வலித்தார் சீரியர் சிதம்பரனார். ஒருநாள், கடும் வெய்யிலில் செக்கிழுக்கையில் மூர்ச்சித்து விழுந்தாராம். கல்வி, கேள்வி, அறிவு, ஆற்றல்களில் மேம்பட்ட பிள்ளையவர்கள் செக்கிழுக்க, அவர் செய்த குற்றந்தான் என்ன ? ஆம், தொண்டு செய்யும் அடிமை சுதந்திர நினைவு கொண்டதே குற்றமல்லவா ! செக்கிழுக்க நேர்ந்ததைப்பற்றி வீரச் சிதம்பரனார் விம்மி யழவில்லை. பின் எப்படி அத்துன்பத்தைச் சகித்திருப்பார் ? எண்ணெயாடும் செக்கைச் சுற்றுவதாக எண்ணியிருக்கமாட்டார்; எண்ணியிருப்பின் அவரது கருணை உள்ளம் கசிந்திருக்கும் ; சைவத்திருமேனி நொந்திருக்கும். அவர் செக்கைச் சுற்றும்போதெல்லாம் சுதந்திர தேவியின் ஆலயத்தைச் சுற்றுவதாகக் கற்பனை செய்து கொண்டிருப்பார். கற்பனுசக்தி படைத்த கவிவாண ரல்லவா !

பிள்ளையவர்கள் செக்கிழுத்ததுமட்டு மல்ல; 'மெய் யறம்' என்ற அறநூல் எழுதிய அவரது கை, சம்மட்டித்தாங் கிக் கல்லுடைத்தது ; மற்றும் மாவரைத்தது. கல்லுடைத்த கடுமைத் தாங்காமல் கைகளில் இரத்தம் கசிந்ததாம். சிறை யதிகாரிகள் பிள்ளையின் கால்களுக்கு விலங்கிட்டனர். விலங்கிட்டு வருத்தினால் வீரங் குறையுமென்று எண்ணினர் போலும்! "சதையைத் துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம் சாயுமோ" என்று கலெக்டர் விஞ்சிடம் அஞ் சாது கூறிய வீரர் கால் விலங்குக்கா அஞ்சுவார்; இவர், தம் தந்தைக்கு கவி வடிவில் எழுதிய கடித மொன்றில்,

"தளைபூண்டேன் காலிலென்ப தாரணியை வென்று
வளைபூண்டேன் என்றுரைத்தால் வம்போ! ...."

என்று சிறையதிகாரிகள் தன் காலுக்குப் பூட்டிய விலங்கை, விலங்காக மதியாது வீரக் கழலென்று பாடுகின்றார் சிதம் பரப் பெரியார்.

சிறையில் தன் நாயகன் படுந் துன்பத்தைக் கேள்வி யுற்று, அவரது மனைவி திருமதி. மீனாக்ஷியம்மையார் உள்ளம் பதறினர். மன்னர்பிரானுக்கும், மகாராணியாருக்கும் மனுச் செய்துகொண்டாராம். எதற்காக? தன் மணாளனை விடுதலை செய்யும்படி யல்ல; அந்தமான் தீவுக்கு அனுப்பி விடும்படி. "சிறை யதிகாரிகள் என் நாயகனைச் செக்கிழுக்கவும் கல்லு டைக்கவும் வைத்துத் துன்புறுத்துகின்றனர். இதைத் தடுக்க வேண்டும்; இல்லையேல் இந்த நிமிஷமே அவரை அந்தமான் தீவுக்கு அனுப்பிவிடுதல் நலம்" என்று எழுதியிருந்தாராம். பிள்ளையவர்கள் சிறையிலிருந்தகாலையில் அவரது குடும்பத் திற்குப் பால கங்காதர திலகரும், ஆப்பிரிக்காவிலிருந்த வேதி யப்பப் பிள்ளை யவர்களும் தலைக்கு ரூபாய் ஐம்பது அனுப்பி

வந்தனர். எண்ணற்ற இன்னல்களைச் சிறையில் அனுபவித்த போதும் பிள்ளை தாய் மொழியாம் தமிழை மறக்காது, தனக்குக் கிடைத்த ஓய்வுநேரங்களை வீணாக்காமல் பல அரிய தமிழ் நூல்களை எழுதினர்.

சிதம்பரம் பிள்ளை யவர்கள் சிறை புகுந்ததும், அவரால் ஆரம்பிக்கப்பட்டு பல இன்னல்களிடையேயும் நடத்திவரப் பட்ட சுதேசிக் கப்பல் கம்பெனி கலைக்கப்பட்டது. அதிகாரிகளின் விரோதஉணர்ச்சியும், பரதேசிக் கம்பெனியாரின் போட்டியும், நாட்டு மக்களின் ஒத்துழைப்புக் குறைவுமே கம்பெனியின் மறைவுக்குக் காரணமாகும்.

---

10. பயங்கரப் புரட்சி!

தமிழ் நாட்டில் தேசீயப் புரட்சியின் வித்தை விதைத்த சீரியர் சிதம்பரனாரை அரசாங்கம் சிறைக்குள் தள்ளியது. எனினும் புரட்சி அடங்கியபாடில்லை. பகிரங்கமாகச் சாத்விக முறையில் நடைபெற்ற சுதேசிக் கிளர்ச்சியைச் சர்க்கார் அடக்குமுறையால் நசுக்கவே புரட்சி வேறு ரூபத்தை அடைந்தது. சாத்விகப் புரட்சி பலாத்காரப் புரட்சியாக மாறியது. சிதம்பரம் பிள்ளைக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனை—திருநெல்வேலி கலகத்தில் கலெக்டர் துரை அவர்களின் துப்பாக்கித் திருவிளையாடல் ஆகியவைகளால் ஆத்திரம் கொண்ட வாலிபர்கள் இனிச் சாத்விகக் கிளர்ச்சி பயன் தராது என எண்ணி, ஆயுதம் கையிலேந்தி பலாத்காரச் செயல் புரியத் தீர்மானித்தனர். அதன் மூலம் நாடு விடுதலை அடையுமெனத் தவறான நம்பிக்கை கொள்ளலாயினர். இவ்வாலிபர்களின் கொள்கை பிள்ளையவர்களுக்கு உடன்பாடன்று.

சிதம்பரம் பிள்ளை அஹிம்சையில் நம்பிக்கை கொண்டவரல்ல. எனினும் ஆயுத பலங்கொண்டு ஆட்சி முறையைக் கவிழ்க்கவேண்டுமென்று இவர் எப்பொழுதும் கூறியதில்லை. அம்முறை இந்தியாவின் தற்போதைய நிலைமைக்குப் பொருந்தாது என்பதும் இவரது கருத்து. பலாத்கார இயக்கத்தைப் பற்றி பிள்ளையின் கருத்து பின் வருமாறு:—

"ஒரு பேரரசின் துணையைப்பெற்றுப் போர் புரிதல், அல்லது தேசம் முழுவதும் ஒரே காலத்தில் புரட்சி செய்தல், சுய அரசாட்சிக்குச் செல்லும் வழி என்று சிலர் கூறுகின்றனர். அவ்வழி

கள் தேச மக்கட்கும், பொருட்கும், அழிவும், கேடும் விளைவிப்பவை; நம் காங்கிரஸ் கோட்பாட்டுக்கு மாறுபட்டவை ; நாம் கைக்கொள்ள முடியாதவை. ஆதலால், அவ்வழிகள் நாம் விரும்பும் சுய அரசாட்சியை அடைவதற்கும், நமது தேசத்தின் நிலைமைக்கும் பொருத்தமற்றவை என நாம் தள்ளிவிடுவோமாக.''

திருநெல்வேலியில் நிகழ்ந்த கலகத்திற்கோ, இனி நாம் கூறப்போகும் பயங்கரக் கொலைக்கோ பிள்ளை அவர்கள் எவ்விதத்திலும் காரணமல்லர் என்பதற்கு மேலே குறிப்பிட்டுள்ள அவரது வாய்மொழியே சான்றாகும்.

1911-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ந் தேதி திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் R. W. D. E. ஆஷ் என்பவர் ரயிலில் கோடைக்கானலுக்குச் சென்றுகொண்டிருந்தார். ரயில் வண்டி மணியாச்சி ஸ்டேஷனை அடைந்ததும், அதே வண்டியில் வந்துகொண்டிருந்த ஒரு வாலிபர் தன் கைத்துப்பாக்கியால் கலெக்டரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் மலங்கழிக்கும் இடத்தில் நுழைந்து வாய் வழியாக சுட்டுக் கொண்டு அதன் பயனாக தலை சுக்கல் சுக்கலாக நொறுங்கி மாண்டார். வழிபோக்கர் ஒருவரால், தற்கொலை செய்து கொண்ட வாலிபர் செங்கோட்டை ரகுபதி அய்யரின் குமாரன் வாஞ்சிநாத அய்யர் எனக் கண்டுபிடிக்கப்பட்டார். பிரேதத்தின் சட்டைப் பையிலிருந்து பல கடிதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அதில் வாலிபர்கள் அரசியல் புரட்சியில் ஈடுபடவேண்டுமென்ற வேண்டுகோளும், செயலாற்றும் திட்டங்களும் எழுதப்பட்டிருந்தனவாம்.

இந்தக் கொலைக்குப் பிறகு போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரித்து கல்கத்தாவில் வாசம் செய்துவந்த தஞ்சை ஜில்லா எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரி, தென்காசி T. S. சிதம்பரம் பிள்ளை ('தினமணி' ஆசிரியர் திரு. டி. எஸ். சொக்கலிங்

கம் பிள்ளையின் தமையனார்) உள்பட மொத்தம் பதினன்கு பேர்களைக் கைதுசெய்தனர். இவர்கள்மீது திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, செங்கோட்டை ஆகியவிடங்களில் இரகசிய சங்கங்களை நிறுவியதாகவும், ஒரே சமயத்தில் தமிழ் நாட்டில் பல விடங்களில் பலாத்காரப் புரட்சியை உண்டு பண்ணச் சதி செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இவ்வழக்கு செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டு ஒன்பது பேர்களுக்குப் பலவித தண்டனைகள் விதிக்கப்பட்டது. ஐவர் விடுதலை பெற்றனர்.

---

11. அரசியல் துறவு.

சிதம்பரம் பிள்ளையவர்கள், தமது தண்டனைக் காலத்தைக் கோயம்புத்தூர், கண்ணனூர் சிறைகளில் கழித்துவிட்டு, 1912-ம் ஆண்டு டிசம்பர் மாதம் விடுதலையடைந்தார். பின்னர் சென்னையில், மைலாப்பூர், சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர் ஆகிய பகுதிகளில் பல ஆண்டுகள் வசித்து வந்தார். சிதம்பரனார் சிறை மீண்டதும், சுப்பிரமணிய சிவாவைத் தவிர, இவரை வாவென்றழைப்பார் ஒருவருமிலர். பல ஆண்டுகள் சிறைக் கொடுமைகளை அனுபவித்துவிட்டு வெளிவந்த சிதம்பரனாரைக் கண்டதும், "அப்பா சிதம்பரம், வந்தாயா!" என்று அன்புடன் அணைத்துக் கொண்டார் சிவா. இதுவன்றோ நட்பு!

ராஜத் துவேஷக் குற்றத்திற்குத் தண்டனை பெற்றதன் காரணமாக, 'வக்கீல் சன்னத்து' பறிமுதலாயிற்று. வருவாய்க்கு வேறு வழியின்றித் திண்டாடினார். அந்நாளில் தனக்குற்ற கஷ்டத்தைக் குறித்துத் தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதமொன்றில்,

> வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்
> தந்த சிதம்பரமன் தாழ்ந்தின்று -சந்தமில்வெண்
> பாச்சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகின்றான்
> நாச்சொல்லும் தோலும் நலிந்து.

எனக் கூறுகின்றார். சிறைக்கஞ்சாத அவர் நெஞ்சம் வறுமையை நினைந்து வாடியது. இவ்வறுமையிலும்கூட பிள்ளையவர்கள் பொதுநலப் பணியில் ஈடுபடத் தயங்கவில்லை. பெரம்பூர் ரயில்வேத் தொழிலாளர் சங்கத்தின் உபதலைவராக இருந்து அவர்களது நலனைக்கோரி பாடுபட்டார்.

ஏற்கனவே பறிக்கப்பட்ட 'வக்கீல் சன்னத்து' நீதிபதி இ. எஸ். வாலஸ் என்பவரின் பேருதவியால் திரும்பக் கிடைத்தது. பின்னர் சில காலம் கோயில்பட்டியில் தங்கி வக்கீல் தொழில் புரிந்து, மீண்டும் தூத்துக்குடியை அடைந்தார்.

கிலாபத் அநீதி, பஞ்சாப் படுகொலை, உதவாக்கரையான மின்டோ—மார்லி சீர்திருத்தம் ஆகியவைகளை எதிர்த்து பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழையாமைப் போர் துவக்க வேண்டுமென காந்தியடிகள் கருதினர். அதற்கான திட்டமொன்றையும் தயாரித்துத் தேசத்தினரின் முன்பாகச் சமர்ப்பித்தார். சட்டசபை, கலாசாலைகள், நீதிஸ்தலம் ஆகியவைகளைப் பகிஷ்கரிப்பதே அத்திட்டத்தின் முக்கிய அம்சம்.

ஒத்துழையாமைத் திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவு கூறுவதற்காக, 1920-ம் ஆண்டு கல்கத்தா நகரில் விசேஷ காங்கிரஸ் மகாசபை கூடியது. இதற்குப் பிள்ளையவர்களும் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். ஒத்துழையாமைக் கொள்கை இவருக்குப் பிடிக்கவில்லை. அதன் சகல அம்சங்களையும் எதிர்த்தார். சுருங்கக் கூறின், காந்தியடிகளின் தலைமையிலேயே சிதம்பரனுர்க்கு நம்பிக்கையில்லை. விசேஷ காங்கிரஸில் காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்திற்கு பலமான எதிர்ப்பிருந்தும், அதிகப்படியான வாக்குகளால் தீர்மானம் நிறைவேறி விட்டது. பிள்ளையவர்கள் சென்னைக்குத் திரும்பியதும், ஒத்துழையாமைத் திட்டத்தின் பயனற்றத் தன்மையை விளக்கிப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டுவிட்டு காங்கிரசிலிருந்து விலகிவிட்டார். ஒத்துழையாமையைப் பற்றி பிள்ளை கூறுவதாவது:—

"நாம் அடைய விரும்பும் நமது உரிமைகளில் எதையே னும் நமது இராஜாங்கத்தார் நமக்குத் தந்தாலும், தர மறுத்தா லும், நாம் அவருக்கு வந்தனம் கூறி நமது தேச நிர்வாக விஷ யத்தில் அவரோடு "ஒத்துழைத்தல்" வேண்டுமென்று நமது கிழவர்கள் (மிதவாதிகள்) கூறுகின்றனர்."

"நாம் அடைய விரும்பும் நமது உரிமைகள் அனைத்தையும் ஒருங்கு நம் இராஜாங்கத்தார் நமக்குத் தரும் வரையில் நாம் அவரோடு நமது தேச நிர்வாக விஷயத்தில் ஒத்துழைக்க மறுக்க வேண்டுமென்று நமது தற்காலத் தலைவர்கள் (காந்தியடிகளும் அவரைப் பின்பற்றுவோரும்) கூறுகின்றனர். இந்த "ஒத்துழை யாமை" தின்பண்டம் முழுவதும் தமக்குத் தரும்வரையில் அதன் ஒரு பகுதியை ஏற்காது தாய் தந்தையரோடு கோபித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் செயல் போன்றது."

"நாம் அடையவிரும்பும் நமது உரிமைகளில் எதையேனும் நம் இராஜாங்கத்தார் நமக்குத் தருவதாயிருந்தால் அதற்காக நாம் அவர்க்கு வந்தனம் கூறி அவரோடு உடம்பட்டு உழைத்தலும், எதையேனும் அவர் நமக்குத் தர மறுப்பின் அதுவிஷயத்தில் நாம் அவரோடு உடம்படாது மாறுபட்டிருத்தலும் வேண்டு மென்றே நாம் (பிள்ளை) விரும்புகிறோம். இச்செயல் தமக்குரிய வற்றைத் தந்தபோது உவந்தும், தராதபோது வெகுண்டும் நிற் கும் காளையர் செயல்போன்றது. சுருங்கக் கூறின், "ஒத்துழைத் தலும், ஒத்துழையாமையும்" ஏக காலத்தில் நிகழவேண்டுமென் பதே நமது அவா."

மீண்டும், 1927-ம் ஆண்டு இவர் காங்கிரசில் பிர வேசித்து, அவ்வாண்டு நடைபெற்ற சேலம் ஜில்லா மூன்று வது அரசியல் மகாநாட்டில் தலைமை வகித்தார். எனி னும், யாது காரணத்தாலோ அதன் பின்னர் அவர் காங் கிரஸுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாமலே இருந்து விட்டார்.

12. மீளாப் பிரிவு.

1936-ம் ஆண்டில் சிதம்பரம் பிள்ளை நோய்வாய் பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகப் படுக்கையாய்க் கிடந்தார். எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பயனில்லை. 'இனி பிழைப்பது அரிது' என்ற நிலைமை ஏற்பட்டதும், மனைவி, மக்கள், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரது பக்கலி லிருந்து பணிபுரிந்தனர். யாரிருந்தும் என்ன பயன்? நவம்பர் மாதம் 18-ந் தேதி நள்ளிரவில், தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகு எய்தினர். "சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்து துஞ்சிடேன்" என்று கூறிய வாய் அடைத்தது. ஏழை மக்களின் இன்னல் கண்டு நீருகுத்த கண்கள் மூடின; சைவ மணங் கமழும் திருமேனி பிணமானது.

தமிழ் நாட்டின் தனிப்பெருந் தலைவர் சிதம்பரம் பிள்ளையின் மரணச் செய்தி திருநெல்வேலி, தூத்துக்குடி யெங்கும் பரவியது. அன்றொரு நாள், 'சிதம்பரனார் சிறைப்பட்டார்' என்ற செய்தியைக் கேட்டதுமே வெறி கொண்டு கலகம் விளைவித்த மக்கள் இவரது மீளாப் பிரிவைச் சகிப்பரோ? பிள்ளைபால் அன்புகொண்ட மக்கள் அவரது இல்லத்தை யடைந்து தங்கள் வீரத் தலைவரை; அரசனுக்கும் தலை வணங்காத ஆண்மையாளரை; கடல்மேலே கப்பலோட்டிய கருணையாளரை; புலவர்கள்தம் வறுமை தீர்த்த புரவலரைத் தரிசித்துத் தங்கள் கடைசி வணக்கத்தைச் செலுத்தினர்.

பிள்ளையவர்கள், தமது ஆவி பிரியும் முன்னர் கவியரசர் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு உள்ளம் பூரித்தாராம். "சாவதற்கு முன்னர் சுதந்தரத்தைக் காணக் கொடுத்து வைக்காமற் போனேன்" என்று கண்களில் நீர் ததும்பக் கூறினராம்.

13. குணாதிசயங்கள்.

அன்பும், அருளும், உழைப்பும், ஊக்கமும், வீரமும், கொடையும் இவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன. நம் நாடு விடுதலை பெறவேண்டின்; உடல், பொருள், உயிர் அனைத்தையும் தியாகம் செய்யச் சிலரேனும் முன் வரவேண்டுமென்பதே இவரது கருத்து. "உடல், பொருள், ஆவி; உடல், பொருள், ஆவி" என்ற பல்லவியை வீணாக எல்லோரும் பாடுகின்றனர். உண்மையில் உடலையும், பொருளையும், ஆவியையும் நாட்டின் பொருட்டு வருத்திக் கொண்டார் சிதம்பரப் பெரியார்.

கொள்கை மாறாக் கோமான் :—"வறுமையை நீக்கு," "உரிமைக்குப் போரிடு," "சிறைக்குச் சிறிதும் அஞ்சாதே" என்பன அவர்தம் சீரிய கொள்கைகளாம். காந்தியடிகள் ஆதிக்கம் காங்கிரஸில் வலுத்த பிறகு, கருத்து வேறுபாட்டால் விலகி அஞ்ஞாதவாசம் புரிந்தாரே யன்றி, அந்நியக் கட்சி எதிலும் சேர்ந்தாரில்லை ; ஏன்? அவர் விரும்பியதெல்லாம் நாட்டின் விடுதலை ஒன்றே. அவ்விடுதலை எவ்வழியில் எவர் மூலம் வந்தா லென்ன ?

நன்றி மறவா நன்னெறியாளர் :— "எழுமை எழு பிறப்பு முள்ளுவர் தங்கள் விழுமந் துடைத்தவர் நட்பு" என்னும் பொய்யா மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார் இவர். சுதேசிக் கப்பல் கம்பெனியின் வளர்ச்சியில் ஊக்கங் காட்டி உதவிய தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தமது பிள்ளைகளில் ஒருவருக்கு வைத்தார். ராஜத்துவேஷக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை யடைந்ததன் காரணமாக இழந்துவிட்ட தனது வக்கீல் சன்னத்

தைத் திரும்ப வாங்கிக் கொடுத்த நீதிபதி வாலஸ் துரையின் பெயரை மறவாது, தமது மற்றொரு புதல்வனுக்கு வாலீஸ் வரன் என்று நாமஞ் சூட்டினார். தனக்கு அவ்வப்போது வேண்டிய பொருளுதவி புரிந்துவந்த வேதியப் பிள்ளையின் ஞாபகார்த்தமாகத் தமது மகளுக்கு, வேதவல்லி என்று பெயர் வைத்தார். இவ்வாறு பல்லாற்றுலும் உதவி புரிந்த பலருக்கும் பிள்ளை தனது நன்றியைச் செலுத்தியுள்ளார்.

கோடை வள்ளல் :—சிதம்பரச் செம்மல் இல்வாழ்க்கையை இனிது நடாத்திய நாளில், தன்னை நாடிவரும் எளிவர்க்கு இல்லையென்னது ஈந்து வாழ்ந்தார். ஈகையும், இரக்கமும் பிள்ளையவர்களிடம் பொலிந்து விளங்கின. பிறர் துன்பங் கண்டால் மனம் பொறார். "இடும்பையா லிளைகின்றேன்" என்று எவர் வாயினின்று கேட்பினும் தன் கையிலிருப்பின் தனக்கென வேண்டாது தாராள குணத்துடன் வழங்குவார். ஒருநாள், ஒருவர் பிள்ளையவர்களை யணுகி என் குழந்தைக்கு முகூர்த்தம் வைத்தாய்விட்டது; கையில் ஒரு காசும் கிடையாது. ஓராயிரம் ரூபாய் தேவையிருக்கும்; எப்படியாவது கொடுத்துதவவேண்டும் எனக் கவிமூலமாய் வேண்டினார். பிள்ளை, அப்போது தன்வசமிருந்த ஓராயிரம் ரூபாயையும் உடனே கொடுத்து உதவிபுரிந்தார். இவ்வாறே இவரது உதவியைப் பெற்ற புலவர் பலர், "நள்ளூர்ப் பழுத்த நற்றருவை நிகர் கரத்தாய்" என்றும், "இருவருடம் போருடம்பா யிருக்குமர னடிபரவி யிரப்போர்க் கெல்லாம், தருவருடம் போலுதவுஞ் சிதம்பர சம்பன்ன" என்றும், "அன்னதானப் பிரபென்று யாவர்களும் கொண்டாடுங், கன்னன் சிதம்பரவேள்" என்றும், "செப்பலைமா முலைவிழியார் மடல்வரையுஞ் சிதம்பரவேள் தீரங்கொண்டு, கப்பலை யப்பலைமீது தானடத்திப் பெரும்புகழைக்

கைக்கொண்டானே" என்றும் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளனர்.

தன்னலங் கருதாத் தருகணாளர்:—தன்னல மறுத்தலும் பிறர் நலம் பேணுதலும் பிள்ளையவர்களின் பிறவிக் குணம். தம்முடன் சிறைப்பட்ட சிவாவைச் சிறையில் விட்டுத் தாம் மட்டும் ஜாமீனில் வெளிவர மறுத்ததும், சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகிக் கொண்டால் லக்ஷம் ரூபாய் தருவதாக அந்நியக் கம்பெனியார் கூறியதை ஏற்க மறுத்ததும் எதனால்? தன்னலமற்ற தன்மையாலன்றோ! இவர் தேசத்தின் பொருட்டுத் தன் கைப்பொருளையும், வருவாயையும் இழந்து பரம ஏழையாக வாழ நேர்ந்தபோதும் பிறர் நலம் பேணுதலை விட்டொழித்தாரில்லை. ஒத்துழையாமைக் காலத்தில் கோயில்பட்டியில் வாழுகையில், சென்னை திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் முதலியோர் மீது நடைபெற்ற அரச நிந்தனை வழக்கில், யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் கருதாது எதிர் வழக்காடினார்.

வெள்ளையர் நடுக்குறு வீர வாழ்க்கையர்:—துப்பாக்கிப் பிடித்த சிப்பாயை கண்டால் 'அப்பா' என்றோடித் தப்பாது தலை மறைத்துக்கொள்ளும் இயல்புள்ள காலத்தில்—'அடி, அம்மா! வெள்ளைக்காரனுக்கு விரோதமாமே!' என்று விதிர் விதிர்க்கும் காலத்தில், பிள்ளையவர்களின் பெயர் ஒன்றே வெள்ளையரிடையே பேரச்சத்தை உண்டாக்கிற்று. "பிள்ளையின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால், செத்த பிணம் உயிர்த்தெழும்; அடிமைப்பட்ட தேசம் ஐந்து நிமிடங்களில் விடுதலை பெறும்; புரட்சி ஓங்கி எழும்" என, இவரைத் தண்டித்த நீதிபதி பின்ஹே கூறினாரென்றால் சிதம்பரனாரின் வீரம் செப்புந் தரத்ததோ!

முக்கால முணர்ந்த மூதறிஞர்:—பிள்ளையவர்கள் இப் மண்ணுலகை விட்டுப் பிரியுந் தருவாயில், அதாவது 1936-ம் ஆண்டிலேயே, "கூடிய சீக்கிரத்தில் உண்டாகும் உலக யுத்தத்தின் மூலம் இந்திய நாடு சுதந்திரம் எய்துவது திண்ணம்" என்று கூறிப் போனார். இவரது ஆழ்ந்த அரசியல் அறிவையும், கனிந்த நாட்டுப் பற்றையும் என்னென்று கூறுவது! இவரது வாக்குப் பொய்க்காதிருக்க இறைவன் அருள்புரிவானாக!

---

14. தமிழ்த் தொண்டு.

சிதம்பரம் பிள்ளை, தாய் மொழியாம் தமிழிடம் மிக்க அன்புகொண்டிருந்தார். ஓய்ந்த நேரங்களில் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்து வந்தார். இவர் சங்க இலக்கிய, இலக்கணங்களில் வல்லவர்; உண்மை உரை காணும் உரம் பெற்றவர்; மதுரை தமிழ்ச் சங்கப் புலவர்.

செய்யுள் வல்ல செந்தமிழ்ப் புலவர்:— இவர் தமிழில் சொற் சுவை, பொருட் சுவை கனிந்த பாக்கள் பல இயற்றி யுள்ளார். கோயம்புத்தூர், கண்ணனூர் சிறைகளில் பிள்ளை யவர்களின் கைகள் கல்லுடைத்ததோடு நிற்கவில்லை; கவி களும் எழுதின. சிறையிலிருக்கையில் தமக்குற்ற இன்னல் களைக் குறித்துத் தந்தைக்கும், தம்மைப் பிரிந்தமைக்கு வருந்த வேண்டாமென ஆறுதல் கூறி அன்னை, மனைவி, நண்பர்கள் முதலியோருக்கும் எழுதிய கவிகள், கேட்போரின் உள் ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்ததாகும். மற்றும், ஈகை, அன்பு, உண்மை முதலிய ஒழுக்கப் பாக்களும், பதி பசுச் செயல்கள், கடவுள் உண்மை, கடவுளுக்குக் காவற்றொழிலை அளித்தல் முதலிய ஞானப் பாக்களுமாக தனிப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். மேலும், அவர் இயற்றிய, 'மெய் யறிவு', 'மெய்யறம்' போன்ற நீதி போதனை நூல்கள் யாவும் பண்டைக்கால நீதி நூற்களுக்கு நிகரானவையாகும்.

கல்வி தானம் தந்த கவியரசர்:—பிள்ளையவர்கள் அநேக ருக்குத் தமிழ்க் கல்வி போதித்து வந்தார். தாம் சொல் லிக் கொடுத்தவற்றை மறுநாள் ஒப்புவிக்க வேண்டும். இன் றேல் வேறு பாடம் நடத்தமாட்டார். இவரிடம் பாடம் கற் றுக் கொள்வது எல்லோருக்கும் எளிதல்ல. மாஜி பிரதம

மந்திரி இராஜாஜி அவர்கள் சிதம்பரனரிடம் திருக்குறள் பாடங் கேட்டபோது, இவரது நிபந்தனைகள் பிடிக்காமையால், "எனக்குப் பாடஞ் சொல்லித் தரும் பொறுமை தங்களுக்கில்லை; தங்களிடம் பாடங் கேட்கும் பொறுமை எனக்கும் இல்லை" எனக் கூறி விடைபெற்றுக் கொண்டாராம். இவர் திருக்குறளைப் பெரும்பாலும் மணக்குடவர் உரை கொண்டே விளக்குவார். பரிமேலழகர் கூறியுள்ள வேண்டா உரையைக் கண்டிப்பார்; அவ்விருவர் உரையும் பொருந்தாவிடில் தம் உரையைச் சொல்லுவார். தமிழ்க்கல்வியில் ஆர்வமுடையோர்க்கு உண்டியுதவியும், உறுபொருள் கொடுத்துங் கற்பிப்பார். இதற்குச் சுவாமி சகஜானந்தம் அவர்களே சான்றாகும்.

இரு மொழி வல்ல மொழிபெயர்ப்பாளர்:—பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்ப்பதில் பிள்ளையவர்கள் பெரிதும் ஊக்கங் காட்டி உழைத்து வந்தார். பிரசித்தி பெற்ற ஆங்கிலப் பண்டிதரான ஜேம்ஸ் ஆலன் அவர்களின் ஆங்கில நூற்களை, 'மனம்போல வாழ்வு', 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயர்களுடன் தமிழில் வெளியிட்டுள்ளார். திருக்குறள்—அறத்துப்பாலை ஆங்கில மொழியில் பெயர்த்துள்ளார்.

பரந்த நோக்குடைப் பதிப்பாசிரியர்:—செந்தமிழ் வல்ல சிதம்பரனர் அரிய தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழ் மக்களுக்கு உதவுமாறு பதிப்பித்துள்ளார். அவைகள், திருக்குறள்—மணக்குடவர் உரை—அறத்துப்பால், தொல்காப்பியம் எழுத்து—சொல்—பொருள் இளம்பூரணம், இன்னிலை ஆகிய நூற்களாகும்.

OFFICE OF THE ... 14 FEB 1944 ... MADRAS

15. முடிவுரை.

வாசகர்களே! சிதம்பரம் பிள்ளை நாட்டின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து செய்த தியாகம் கொஞ்சமன்று. அவரது தேசபக்தி களங்கமற்றது. சிதம்பரம் பிள்ளை, தேச பக்தர்களுக்கு மதிப்பற்ற காலத்தில், தேச பக்தராய்த் திகழ்ந்தார். எவரும் காணுத் தனியிடத்துங்கூட ' வந்தே மாதரம் ' என்று உச்சரிக்கவும் பயந்த காலத்தில், ஆங்கிலத் துரைமகனுர், கலெக்டர் விஞ்சின் முகத்தெதிரே, " வந்தே மாதர மென்றுயிர் போம்வரை வாழ்த்துவேன் " என்று அஞ்சாது கூறினுர் பிள்ளை. பாமரமக்கள் காங்கிரசில் புகாத அந்நாளில்—ஆங்கிலத்தில் பேசுவதே பெருமை ; தமிழில் பேசுவது சிறுமை, என்று எண்ணிய காலத்தில், பாமர மக்களைக் கூட்டி வைத்துப் பசுந் தமிழில் பேசிச் சுதந்திரப் போருக்குத் தமிழர்களைத் தட்டி யெழுப்பிய பெருமை சிதம்பரனுரின் தனியுரிமை.

பிள்ளையவர்களை வட நாட்டார் அறிந்துவைத்த அளவு தமிழ் நாட்டார் தெரிந்து வைக்கவில்லை எனத் துணிந்து கூறலாம். இதற்குச் சான்ருக சில சம்பவங்களை இங்கு எடுத்துக் கூறுவோம்.

சூரத் காங்கிரஸின்போது பிரதிநிதிகளின் விடுதியில் மகான் அரவிந்தர், லாலா லஜபதிபோன்ற தீவிரவாதத் தலைவர்களும், வேறு பல பிரதிநிதிகளும் உட்கார்ந்திருந்தனர். அச்சமயத்தில் அரவிந்தர், அங்கிருந்தவர்களை நோக்கி, " Where is my Pillai ? " (என் பிள்ளையவர்கள் எங்கே) என்று கேட்டார். யாவரும் சற்றுத் திகைத்திருந்தனர். உடனே அரவிந்தர் விளக்கமாக, " அவர்தான், புகழ்பெற்ற

தேச பக்தர் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை," என்றார். எல்லோருக்கும் இவ்வார்த்தைகள் தூக்கிவாரிப் போட்டதைப் போலிருந்தன. பிள்ளையவர்களும் அங்கு வந்து சேர்ந்தார். அரவிந்தர் அவரை அன்போடு அணைத்துக் கொண்டார்.

1935-ம் ஆண்டில், காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் தூத்துக்குடிக்கு வந்திருந்தபோது, பிள்ளையவர்கள் நோயுற்றிருப்பதாகக் கேள்விப்பட்டதும், தாமே, சிதம்பரனாரின் இல்லம் சென்று கண்டு பேசினார். "சிதம்பரம் பிள்ளை வாழும் தூத்துக்குடிக்கு வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது ; அவர் சிறைச் சென்றதாகப் பத்திரிகைகளில் பார்த்துத் தேசாபிமான ஆர்வங் கொண்டவர்களில் யானும் ஒருவன் " என்று ராஜேந்திரர் அன்று மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் கூறினார்.

சிதம்பரனார் நம்மை விட்டுப் பிரிந்து, ஆண்டுகள் பல ஆகின்றன ; எனினும், அவரது ஆவி இன்னும் நம்மை விட்டுப் பிரியவில்லை. பாரதநாடு பரிபூரண சுதந்திரம் பெறும் வரை—ஏழைத் தொழிலாளர்கள் சுகவாழ்வு எய்தும்வரை பிள்ளையவர்களின் ஆவி நம்மை விட்டுப் பிரியாமல் நமது சுதந்திரப் போருக்குத் துணைநிற்கும் என்பது திண்ணம்.

வந்தேமாதரம்.

Printed at the Tagore Printing Cottage, Purasawalkam, Madras.

சுதேசிக் கப்பல் விட்ட
துணிகரத்தார் சிதம்
பரம் பிள்ளை. அதில்
துன்பம் பல சகித்தார்
சிதம்பரம் பிள்ளை.

விதேச மோகமெல்லாம்
விட்டவர் சிதம்பரம்
பிள்ளை. இங்கே வீர
சுதந்தரத்தை நட்டவர்
சிதம்பரம் பிள்ளை.

இசைத் தமிழ்

நாமக்கல்

இராமலிங்கம் பிள்ளை

அவர்கள் எழுதிய

ஆராய்ச்சி நூல்

விலை ரூ. 1-8-0

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் - சென்னை

Cover Designed & Printed at P. A. S. Press, Post Box 349, Mount Road, Madras